While founding the above organizations, Swami Vivekananda had an idea of starting similar organizations for women, for he knew that there was no chance for the welfare of the world unless the condition of women was improved, as it was not possible for a bird to fly on only one wing. In one of his letters, he said "Hence it is that my first endeavour is to start a Math for women". He also wrote, "With the Holy Mother as the centre of inspiration a Math is to be established on the eastern bank of Ganga. As Brahmacharins and Sadhus will be trained in this Math (Belur Math) so in the other math also, Brahmacharinis and Sadhvis will be trained".

Though the Swami was very particular in getting a Women's Math started as quickly as possible where a band of educated Sannyasinis could be trained to serve humanity, his idea, however, could not take shape at the time because of the lack of education among women and the prevailing social conditions.

Fifty years after his passing away, a number of educated women, inspired with his ideals of renunciation and service, came to dedicate their lives for their own spiritual growthas well as for the uplift of their sisters. In 1954, in the year of Holy Mother's Birth Centenary, the authorities of the Belur Math thought that it was high time to give a concrete shape to the ideas of Swami Vivekananda. Accordingly, a piece of land about 6 acres with some buildings on it was procured on the eastern bank of the Ganga, a little north of the Dakshineswar kali Temple.

On the 2nd December, in the same year, Swami Shankarananda, the seventh President of the Ramakrishna Math and Mission, performed the opening ceremony of the Women's Math in the presence of a large number of senior monks and Trustees of the Ramakrishna Order. Swami

Vishuddhananda, who was then the Vice-President, Swami Madhavananda, the General Secretay, Swami Vireswarananda, one of the Assistant Secretaries, besides the Brahmacharinis (nuns) and a large number of devotees assembled from near and far.

The opening of Sri Sarada Math, as contemplated by Swami Vivekananda, added a new and very significant chapter to the socio-religious history of India.

After the Math was run by the Brahmacharinis for some years successfully, under the guidance of the Trustees of the Belhur Math, it was decided to hand it over to them so that the work for women could be carried on independently by them.

On the 1st of January, 1959, on the birthday of the Holy Mother, eight senior members of the Sarada Math were invested with sannyasa by Swami shankarananda, who was then the President of Ramakrishna Temple and Mission. This was a preliminary step to the formation of an independent Women's Organization. In August 1959, Sri Sarada Math was given independent status and the sannyasinis became its Trustees by virtue of a Deed of Trust executed by the President of the Ramakrishna Math.

In May 1960, the Trustees of Sri Sarada Math, according to the advice of the authorities of the Belur Math, fouded the Ramakrishna Sarada Mission Association which was registered under Act XXI of 1860 with the object of carring on educational, cultural, charitable and similar activities among people and children, looking upon them as veritable manifestations of the Divine. Thus, Sri Sarada Math and the Ramakrishna Sarada Mission, though legally separate, are basically one with the Ramakrishna Math and the Ramakrishna Mission, being their counterparts.

# SRI SARADA MATH AND THE RAMAKRISHNA SARADA MISSION

Sri Sarada Math and the Sri Ramkrishna Mission with their branches, are distinct institutions, but they are colely related as the Governing Body of the Mission is made up of the Trustees of the Math; the main workers of the Mission are Sannyasinis of Sri Sarada Math and both have their Headquaters at Sri Sarada Math, Dakshineswar. Sri Sarada Math and the Ramakrishna Sarada Mission, both take up charitable and philanthropic activities.



சுவாமி விவேகானந்தர்
SWAMI VIVEKNANDA

# CHICAGO ADDRESS

# RESPONSE TO WELCOME

At the World's Parliament of Religions,
Chicago, 11th September 1893

Sisters and Brothers of America,

It fills my heart with joy unspeakable to rise in response to the warm and cordial welcome which you have given us. I thank in the name of ancient order of monks in the world; I thank you in the name of the mother of religions; and I thank you in the name of millions and millions of Hindu people of all classes and sects.

My thanks, also, to some of the speakers on this platform who, referring to the delegates from the Orient, have told you that these men from far off nations may well-claim the honour of bearing to different lands the idea of toleration. I am proud to belong to a religion which has taught the world both tolerance and universal acceptance. We believe not only on universal toleration, but we accept all religions as true. I am proud to belong to a nation which has sheltered the persecuted and the refugees of all religious and all nations of the earth.

Note: Swami Vivekananda landed in Vacouver Canada when he first came to the West - America.

# 1st YEAR REMEMBRANCE

## Revered Swami Prematmanandaji Maharaj

Head of the Ramakrishna Mission Sri Lanka Branch

1954 - 1987

The Swami was born on 13.04.1903 at Annaipanthy, Jaffna. He joined the Ramakrishna Order at Kuala Lumpur in 1925 and then he went to Belur Math, Calcutta in 1929. He had sanyas in 1929 from his guru,Srimath Swami Shivanandaji Maharaj, a dierect disciple of Sri Ramakrishna. He served the Ramakrishna Mission as Manager, Advaita Ashrama, Mayavati and calcutta. He was the head of the Mission Centres at Kanchi, Kankhal Hardwar, Rangoon and Ootacamund. He was the member of the Working Committee of the Ramakrishna Mission at Headquarters before he came to Colombo in 1954 to take charge of Mission Branch in Sri Lanka.

He retired from active service in 1987 due to health reasons. He had numerous devotees and friends all over the Island and also in India.

May his soul rest in peace at the feet of his master, Sri Ramakrishna.

## Revered Swami Samprajnanandaji Maharaj

Head of the Ramakrishna Mission Sri Lanka

1987-1990

The swami was born in 15-06-1919 in a village in Mysore State. The Swami as a student came in contact with Ramakrishna Ashrama, Bangalore. He had the rare opportunity of seeing His Holiness Srimath Swami Vijnanandaji Maharaj the sixth President of the Ramakrishna Math & Mission.

He joined the Order as a novitiate at the Ramakrishna Math, Mylalore in the year 1940. He was ordained as a monk of the Ramakrishna Order by his Guru in 1949.

He has worked as an Assistant Secretary at Shilpamandira (Polytechnic) for over 20 years. Swami was appointed as Head of the Ramakrishna Mission Ashrama, Almora, from where he was transfered to Ponnampet, Coorg (Mysore State).

Swamiji became the Vice President of the Ramakrishna Mission - Sri Lanka Branch in June 1987 and served wholeheartedly till his last - 19.05.1990.

Om Shanti, Shanti, Shanti

**ஸ்ரீராம கிருஷ்ணபரம ஹம்சர், தூய அன்னை சாரதா தேவியார், சுவாமி விவே கானந்தர் ஆகியோரது போதனைகளைப் பரப்பி வரும் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியிலுள்ள இராமகிருஷ்ணலயம் (கல்விப்பகுதி, யாழ் பல்கலைக்கழகம், இலங்கை) பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களை உரை நிகழ்த்த அழைத்தது. இராமகிருஷ்ண பாரம்பரியத்தில் ஊறிய மணிவிழாக் கண்ட இந்த அறிஞரின் உரையை அச்சிட்டு வெளியிட்டது.**

**மறைந்த பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள் ஞாபகமாக இங்கு அவ்வுரையை பிரசுரிக்கிறோம்.**

**பா**ரிலரும், புகழ் படைத்த பரமஹம்ஸன்
பாரதத் தாய் செய்த தவப்பயனாய் வந்தோன்
நீர் ஒழியப் பால் உண்ணும் நெறியில் ஆய்ந்து
நிலையான உண்மைகளை நெஞ்சிற் கொண்டோன்
மாமதி விவேகானந்தற்குக்
கோதிலா மெய் ஞான குருவாய் நின்றோன்
சீரிய நம் ராமகிருஷ்ண தேவன் பாதம்
சென்னி மிசை கொண்டு நிதம் சேவிப்போம்

'உலகின் விமோசனத்திற்காக நான் மீண்டும் பிறக்க இருக்கின்றேன் என மகாவிஷ்ணு பள்ளிகொண்டிருக்கும் கயை என்னும் இடத்தில் ராமகிருஷ்ண தேவரின் தந்தையார் சட்டோபாத்தியாயர் அவர்களுக்கு இறைவன் வாக்கு அளித்தபடி குருதேவர் 1836ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி பிறந்தார். தனது ஆறுவது வயதிலேயே இறை அனுபவம் பெற்ற அவர், 1886ஆம் ஆண்டு மகா சமாதி அடையுமட்டும் இறைவனோடே ஒன்றித்து வாழ்ந்தார்.

அருளும், அன்பும், அறிவும், ஞானமும் ஒன்றித்து உலகில் மக்கள் சமுதாயம் உய்யும் நெறியினைக் காட்டி அருளியவர் ராமகிருஷ்ணதேவர். பாரத நாட்டின் ஐந்து ஆயிரம் ஆண்டுகளுக்குமேற்பட்ட ஆன்மீக வாழ்வினதும், எழுபது கோடி மக்களின் தத்துவ, சமய, பண்பாட்டுக் கலாசார மரபினதும் முழு நிறைவே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் என்பது பிரெஞ்சு நாட்டு தத்துவம்., அழகியற் கலைப் பேராசிரியர் ரொமெயின் ரோலந்து அவர்களின் கருத்தாகும். இவர் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தி அடிகள் ஆகிய நூல்களின் ஆசிரியர். இவரது இல்லமே இன்று பிரான்ஸ் நாட்டின் இராமகிருஷ்ண வேதாந்த நிலையமாகும். இவரே குருதேவரின் நூறும் ஆண்டு ஜெயந்தி விழாவிற்கு கல்கத்தா நகரில் தலைமை வகித்தவர்.

ஆத்மீக வளமும் கல்வி வளமும் நிறைந்த வங்க நாட்டிலே, கல்கத்தா நகரத்திற்கு நான்கு மைல் தொலைவில் தட்சணேஸ்வரம் எனும் புண்ணியம்பதி, கங்கை நதி திரத்தில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் அன்னை பராசக்தி , பவதாரிணி, பவானி எனும் பெயர் பெற்று விளங்குகின்றாள். இராசமணி அம்மையார் எனும் கொடை வள்ளல் நிறுவிய இத் திருக்கோயிலில் பிற்கால இராமகிருஷ்ண தேவரின் குடும்பத்தினர் பலவகைப் பணிகளும் புரிந்தார்கள்.

தேவி பவதாரிணி, பிறவியில் நின்றும் காப்பாற்றுபவள்; பவானி என்னும் பெயரும் கொண்டவள் அன்னை. உலகினை ஆக்கி இயக்க வைக்கும் பராசக்தியாக, அறத்து முதலாக, கருணை மழையாக, பெரும் வலிமையாக, சஞ்சலம் தீர்க்கும் அன்னையாக, உள்ளத்து ஒளிரும் சுடராக குருதேவருக்கு காட்சி அளித்தாள். இதற்கெல்லாம் மேலாக சக்தி, வீரம், செயற்பாடு ஆகியவற்றின் அடிமுதலாக, உலக ஆசிரியையாக, மனித குலத்தின் காவலனாக, அறிவு, அனுபவம் ஆகியவற்றில் எழுந்த ஞானத்தின் சின்னமாக, ஒளியாக, நித்தியமான கல்வியின் சிகரமாகக் காட்சி அளித்தாள்.

தூய அன்னை சாரதாதேவி கலைமகளின் அவதாரம் எனக்கொண்டவர் ராமகிருஷ்ணர். அருளும் அன்பும் ஒளியும் சேர்ந்து உருவான தேவர் தமது வாழ்நாள் முழுவதையும் அன்னையின் சொரூபமாகிய தெய்வமாதின் அடிபணிந்து கழித்தார். அந்த அன்னையே அவரது உயிர் உள்ள தெய்வமாக திகழ்ந்தாள்.

**அவளே**, பல வடிவங்கள் கொண்ட ஆண்டவளுக **ஆயிரம்** திருமுகங்களிற்கும் இடையே ஜொலித்தாள். **அவளை** அவர் அடைந்தவேளை, அவளிடம் மற்ற எல்லா **முகங்களும்** ஒன்று சேர இருப்பதைக் கண்டு **அறிந்தார்**. அன்னையோடு கூடி உலகம் அனைத்தையும் அவர் தழுவிக் கொண்டார். இந்தப் பரமானந்த தெய்வீக முழுமையில் தம் வாழ்நாளைக் கழித்தார்.

தட்சணேஸ்வர கோயில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே மிக உயர்ந்த சமய சமரசம் எடுத்துக் காட்டப்படுகின்றது. இயற்கை அன்னை, பரம்பொருள், அன்பு எனும் முப்பொருள்களும் கோரதேவி, வேணுகானலோவன், தன் மய நிலையில் உள்ள பிரம்மம் ஆகியன இங்கு உறைவது, இந்து சமயத்தின் உயர் நிலையை எடுத்து விளம்புகின்றது. ராமகிருஷ்ண தத்துவத்தின் தொடக்கம் இதுவேயாகும்.

"நான் எல்லாச் சமயங்களையும் பின்பற்றியுள்ளேன். இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியன அனைத்திலும் ஆழ்ந்துள்ளேன். பல்வேறு சமய வழிமுறைகளுடன் சென்றிருக்கின்றேன். எல்லாமே வெவ்வேறு வழிகளில் ஒரே கடவுளை அடையும் நோக்கத்துடன் உழைக்கின்றன என்பதனைக் கண்டுகொண்டேன். எல்லாச் சமயங்களையும் , பல்வேறு வழிகளையும் ஒரு தடவையாவது கண்டு அறிய வேண்டும். ஆனால், நான் நோக்கும் திசை எல்லாம் சமயத்தின் பேரால் இந்துக்கள், முஸ்லிம்கள், பிரம்மசமாஜிகள், வைஸ்ணவர்கள் போன்றோரும் மற்றவர்கள் அனைவரும் சண்டையிட்டுக் கொள்வதைக் காண்கின்றேன்."

கிருஷ்ணன் என்று நாம் அழைப்பவர்தான் இவர். அவர்தான் ஆதிசக்தி, அவரே இயேசு, அவரே அல்லா, அவரே ஆயிரம் திருநாமம் கொண்ட இராமன். பல்வேறு பெயர்களில் இயங்குவது ஒரு பரம்பொருளே. எல்லோரும் நாடுவது அந்தத் தத்துவத்தைத்தான். பருவநிலை, குணநிலைகள், பெயர்கள் ஆகியவற்றில்தான் வேறுபாடு உண்டு. ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த வழியில் செல்லட்டும், அவன் மனமார சிரத்தையுடன் கடவுளை அறிய விரும்பினால் அவனுக்கு சாந்தி கிடைக்கும் எனக் கூறுவார் பரமஹம்சர்.

தமது வாழ்வின் இறுதிவரை அவர் கிறிஸ்துநாதரை கடவுளின் அவதாரம் எனக் கொண்டார். ஆனால், அவரே ஒரு அவதார புருடர் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. கிருஷ்ணரும், புத்தபகவானும் அவதார புருட என்பது அவர் கருத்து. புத்தரது தெய்வத் தன்மையை ஏற்றுக் கொண்ட அவர், சமண சமயத்தை நிலைநாட்டிய தீர்த்தங்கரர் இடத்தும், சீக்கிய சமயத்தை சார்ந்த பத்துக் குருக்கள் இடத்தும் பெரு மதிப்பைக் காட்டி வந்தார். இன்று பாரதம் வேண்டி நிற்பது இதுவேயாகும். ராமகிருஷ்ண தேவர் வாழ்ந்த தட்சணேஸ்வரத்தில், அவர் வாழ்ந்த தெய்வீக அறையில் இன்றும் அவர் வழிபட்ட மகாவீரது சிலையும், கிறிஸ்து பெருமானின் படம் ஒன்றினையும் காண்கிறோம். இந்த அறையினுள் சென்றால் பக்தி நிரம்பி வழியும். ராமகிருஷ்ண சங்கம், ராமகிருஷ்ணர் இறைவனின் அவதாரங்களுள் ஒன்று எனக் கொள்கிறது.

'செயற்கரியன செய்வர்' தீர்க்கதரிசிகள், அவதார புருடர்கள் இறை மனிதர்கள் இப் பெரியோர்களின் உண்மைப் பெறுமதி உலகத்தாரால் உடனடியாக உணரப்படுவது அருமை. பெரும்பாலும் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த பின்னரேஅவர்களது அருமையும், பெருமையும் இவ்வுலகில் போற்றப்படுகின்றன. கால, வர்த்தக, தேசமானங்களைக் கடந்து நின்ற குருதேவர், அவர் வாழும்பொழுதே அவதாரபுருடர் எனக் கொள்ளப்பட்டார். அவர் அதனை மறுத்தாலும் உலகம் அதனை ஏற்றுக் கொண்டது. பல அறிஞர்கள், பண்டிதர்கள், பல இன மக்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், ஆங்கிலேயர்கள் சிரம் தாழ்த்தினார்கள். சமய, கல்வி, பண்பாட்டுக் கலாசார மறுமலர்ச்சிக் கழகங்கள் ராமகிருஷ்ண தத்துவமே மம்மர் அறுக்கும் மருந்து என ஏற்றுக்கொண்டன.

ராமகிருஷ்ணரது ஆன்மீக மரபை தனதாக்கிக் கொண்டு அவரது சிந்தனையின் வித்தினை உலகெங்கும் ஊன்றிய மகத்தான சீடரே சுவாமி விவேகானந்தர். இக்காலத்தில் சுவாமி விவேகானந்தருக்கு ஒரு தெய்வீக நிகழ்ச்சி நடந்தது. அவரது ஆங்கில இலக்கியப் பேராசிரியர், உவில்லியம் கேஸ்ரிங், உவில்லியம் வேட்ஸ்வேர்த் எனும் ஆங்கிலப் புலவர் இயற்றிய கவிதையையிட்டு விமர்சித்துக் கொண்டிருந்தார். அக்கவிதையில் ஆத்மீக இன்பம் எனும் சொற்தொடர் அடிக்கடி வந்தது. பேராசிரியர் பல விளக்கங்கள் கொடுத்தார். விவேகானந்தரான நரேந்திரன் இன்னும் விளக்கம் கேட்டார். பேராசிரியர் பரிவோடு, உணர்ச்சி வசப்பட்டு, அன்போடு,

தட்சணேஸ்வரக் கோயிலில் ஒரு சாது வாழ்ந்து வருகின்றார் அவரை ஒரு தடவை கண்டால் இச் சொற்றொடர் மிகவும் தெளிவாக விளங்கும் என விடை அளித்தார்.

விரிவுரை முடிந்ததும், நான்கு மைல்கள் ஓடி நரேந்திரன் தட்சணேஸ்வரம் அடைந்தார். குருதேவரை தியான நிலையிற் கண்டார். நரேந்திரன் குருதேவரால் அக்கணமே ஆட்கொள்ளப்பட்டார். குருதேவரும் நாராயணா, மனித வர்க்கத்தின் துயரைத் துடைக்க மறுபிறப்பு எடுத்தவன் நீ என அவனை அணைத்தார்.

இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்து சமய வரலாற்றில், உலக வரலாற்றில் சிறந்த நிகழ்ச்சியாகும். பழமையும், புதுமையும் இணக்கம் கண்டன. ஆத்மீக நோக்கும், உலோகாய நோக்கும் இணைந்தன. பாரத நாட்டின் மனச்சாட்சியே விவேகானந்தராகும். தூய அன்னை சாரதாதேவியின் ஆசியோடு விவேகானந்தர் ஆத்மீக யாத்திரையை ஆரம்பித்தார்.

1893ம் ஆண்டு செப்டெம்பர் 11ம் நாள் உலக சமய ஒற்றுமைக் கழகத்தில், குருநாதரின் தத்துவமே ஒலித்தது. கருத்தற்ற வாதங்கள் நிறைந்த சொற்பொழிவுகளுக்கு இடையே அந்த ஒளி அங்கு வந்த மக்கள் திரளுக்கு ஓர் ஆன்ம அனுபவத்தை உண்டு பண்ணியது. உலக நாடுகளில், பராயத்தில், வயதில் குறைந்த ஐக்கிய அமெரிக்காவை உலகத்தில் மிகப்பெரிய துறவிச் சமூகத்தின் பெயரால் வைதிக சந்நியாசிகளின் பெயரால் அவர் வாழ்த்தினார்.

இந்து சமயம் எல்லாச் சமயங்களுக்கும் அன்னை; அது ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுங்கள் எனப் போதிப்பது; மனிதன் தெய்வ அம்சம் பொருந்தியவன்; அவன் இடையறாத வளர்ச்சி கண்டு ஏற்றம் காண்பதற்கான தகுதி உடையவன்; அத்தகைய சமயத்தை உலகுக்கு வழங்குதல் வேண்டும். இதனை இந்து சமயம் அளிக்கிறது.

இந்துக்கள் கண்ட பிரம்மம், பௌத்தர்கள் கண்ட புத்தர், யூதர்கள் கண்ட ஜெகோவா, கிறிஸ்தவர்கள் கண்ட யேசு பகவான், சோரஸ்தர்கள் கண்ட அகூரா மஸ்தார், இஸ்லாமியர்கள் கண்ட அல்லா எல்லோரும் மக்களுக்கு சக்தி தரும் தீர்க்கதரிசிகள். தூய்மை, ஞானம், கருணை உலகில் எந்தவொரு திருச்சபைக்கும் ஏகபோகமான உரிமை அன்று. ஒவ்வொரு சமயக் கொடியிலும், உதவிக் கொள்ளுங்கள், சண்டை இடாதீர்கள், உருவாக்குங்கள் அழித்துக் கொள்ளாதீர்கள், கேண்மையும், சாந்தியும் நிலவட்டும், தகராறுகள் தேவையில்லை எனும் கருத்துக்களை முன் வைத்தார். ராமகிருஷ்ணரின் மகத்துவ தத்துவம் விவேகானந்த பெருமான் மூலம், எல்லா மக்களையும் கருத்திற்கொண்டு பேசியதால் எல்லோரையும் விஞ்சி எல்லோரது சிந்தனையையும் அது ஊக்குவித்தது.

விவேகானந்தர் ஐக்கிய இராச்சியத்தில் 1895ஆம், 1896ஆம் ஆண்டுகளில் மூன்று தடவை தங்கி இருந்தார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக தத்துவப் பேராசிரியர், இவர் மகாசமாதி அடைந்து ஐந்து வருடங்களுக்குள் தேசிய நோக்கு எனும் சஞ்சிகையில் குருதேவரையிட்டு ஆழ்ந்த ஒரு கட்டுரை எழுதினார்கள். நான்கண்ட உண்மையான மகாத்மா எனும் ஒரு சிறந்த ராமகிருஷ்ண தேவரைப் பற்றிய நூலை எழுதிய பெருமையும் இவருக்குண்டு. பேராசிரியர் குருதேவரை கீழ்த்திசையில் தோனறி சுடர்விட்டு எரியும் நட்சத்திரம் என வர்ணித்தார்.

களைப்புறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு, ஆன்மாக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் மக்களாக நாம் வாழ வேண்டும். நமது சொந்த நன்மையை சுயநல உணர்வுடன் நாடுதல் கூடாது. நாம் எல்லாவற்றிலும் ஈடுபாடு உள்ளவர்களாக வாழவேண்டும். தியானத்திலும் சரி, செயல் ஆற்றுவதிலும் சரி மிக உயர்ந்த ஞானம், மனித வர்க்கத்தின் மிக உயர்ந்த சேவையாகப் பரிமளிக்க வேண்டும். பணிவுடன் எத்துன்பத்தையும் பொருட்படுத்தாமல், தைரியமாக மனத்தை சேவைக்காக அர்ப்பணிக்க வேண்டும். இத்தத்துவ கருவில் எழுந்ததே இராமகிருஷ்ண சங்கம்.

ராமகிருஷ்ண சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவுதல் மனித குலத்தின் நன்மைக்காக, உயர்வுக்காக ராமகிருஷ்ணதேவர், உபதேசித்து தனது வாழ்க்கையில் அனுஷ்டித்து வந்த உண்மைகளைப் பரப்புதல், மக்களின் மன, மெய், மொழி வளர்ச்சியில் ராமகிருஷ்ண நெறியினை அனுஷ்டிக்கத் துணைபுரிதல், அத்தோடு வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுவோரிடையே தோழமையை ஏற்படுத்த தத்துவ அடிப்படையிலும், நிறுவன அடிப்படையிலும் முயற்சித்தல், ஞானத்தையும், விஞ்ஞானங்களையும்

போதிப்பதற்கு தகுதி உள்ள மக்களை பயிற்சி அளித்து ஆயத்தம் செய்தல். கலைகளையும், தொழில்களையும் ஊக்குவித்து வளர்த்தல், பிறநாட்டுக் கேத்திரங்களுக்கும், பாரத நாட்டுக் கேத்திரங்களுக்குமிடையே நெருங்கிய உறவு முறையை அமைத்துக் கொடுத்து பரஸ்பரம் அனுதாபத்துடன் உதவிக் கொள்ளும் உணர்வைத் தோற்றுவித்தல் இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

விவேகானந்தர் நிறுவிய நிறுவனம் சமுதாய நலனுக்காக, கல்வி வளர்ச்சிக்காக, மனிதாபிமானத்துடன், மனித வர்க்கம் அனைத்துமே உணரக்கூடிய வகையில் தருமப்பிரசாரம் செய்யும் தன்மை உள்ளது. இந்நிறுவனம் தெய்வ நம்பிக்கை, பகுத்தறிவு வாதத்திற்கு எதிர் இடையானது அல்ல என எடுத்துக்காட்டுவது ஆன்மீகத் துறையிலும் அறிவியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், இந்நிறுவனம் ஒற்றுமை கண்டு செயற்படுவது.

1897ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 15ஆம் நாள் தமது ஆங்கிலச் சீடர்களோடு கொழும்பு வந்து சுவாமிகள் சேர்ந்தார்கள். வீரமுரசு விவேகானந்தரை, கொழும்புத் துறைமுகத்தில் திரண்டிருந்த மக்கள் கூட்டம் இடி முழக்கம் செய்து அவருக்கு வரவேற்பு அளித்தது. இவ்விழாவிற்கு பின்னணியில் நின்ற அறிஞர் அரசியல் மேதை இராமநாதன் அருணாசலம் அவர்களுக்கு முன்னோடியான இலங்கைத் தமிழர் பொன்னம்பலம் குமாரசுவாமி அவர்கள் என்பதையும் நாம் நினைவு கூர வேண்டும்.

நமது நாட்டில் ராமகிருஷ்ண விவேகானந்த வேதாந்தம் ஓரளவு பரவியுள்ளது, பரவுகின்றது. சமய ஒற்றுமைக்கழக மகா நாட்டுக்குப் பின்னர் இலங்கை வழியே விவேகானந்தர் தாயகம் திரும்பினார்கள். அதன் பின்னர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்கள் சுவாமி சிவானந்தர், ராமகிருஷ்ணானந்தர் போன்ற துறவிகள் வந்தார்கள். தென் பாரதத்தில் வேதாந்தப் பயிர் வளர்த்த சுவாமி சர்வானந்தர் இலங்கையில் ஆற்றிய தொண்டு அளவிடற்பாலது. சுவாமி சிவானந்தரே விபுலானந்த அடிகளுக்கு துறவித் திட்சை கொடுத்தார்கள். சுவாமி சர்வானந்தரே அடிகளாரை ராமகிருஷ்ண தத்துவ அடிப்படையில் ஆட்கொண்டார்கள்.

துறவிகளின் வருகையால் பல விவேகானந்த மன்றங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தளை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. இவை ஆத்மீக முறைசாராக் கல்வி நிலையங்களாக விளங்கின. இந்நாடு அளித்த முதல் ராமகிருஷ்ண சங்கத் துறவி விபுலானந்த அடிகள். கிழக்கிலங்கையில் 30 தலைசிறந்த கல்லூரிகளும், வட இலங்கையில் 2 கல்லூரிகளும், ஊவா மாகாணத்தில் 1 கல்லூரியும் நிறுவப்பட்டன.

கொழும்பு விழாவிற்குப் பின்னர் கண்டி, மாத்தளை, அனுராதபுரம் வழியாக சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்தார்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஜனவரி மாதம் 25ஆம் நாள் அவரது சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. இரண்டு மைல் தூரம் 15,000 மக்கள் வரிசையில் நின்று வரவேற்றார்கள் என்றும் கூட்டத்தில் 4,000 பேர் பங்கு பற்றினார்கள் என்றும் குறிப்பேடுகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தில் அவர் நிகழ்த்திய உரைகளுள் இதுவே சிறந்த உரை என்றும் கொள்ளப்பட்டது.

இந்நாட்டு மக்கள் தூய்மை, தானம், சாந்தம் ஆகிய சீரிய குணங்களில் உயர்ந்த நிலை அடைந்துள்ளார்கள். இந்த நாடு ஆத்மீக சிந்தனையிலும், தெய்வீகத் தன்மையிலும் சிறந்து விளங்குகின்றது. தத்துவ அமிர்தத்தை வெள்ளப் பெருக்காகக் கொடுத்து வருகின்றது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு முதலிய எல்லாத் திசைகளிலும் உலகமெல்லாம் பரவி வரும் தத்துவ உண்மைகள் பாரத நாட்டில் தோன்றின என கூறி அதே வேளையில் நெடுங்காலமாக நாம் பொறாமையில் மூழ்கிக் கிடக்கின்றோம், இவனுக்கு ஏன் அதிக மரியாதை கிடைக்கிறது, பொறாமையை மனத்தில் இருந்து அகற்றினால் மகத்தான செயல்களை ஆற்றக்கூடிய சக்தி உண்டாகும், எனும் கருத்துக்கள் இங்கு கூறப்பட்டன. கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில் கூட நாம் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகின்றோம். இதை விட கேவலமான அடிமை உணர்ச்சி வேறு என்ன இருக்க முடியும் என்பதும் அவர் கருத்து.

இலங்கைத் திருநாட்டில் இருந்து சுவாமி இராமேஸ்வரம், மதுரை, சென்னை வழியாக கல்கத்தா சென்றார்கள். இராமேஸ்வரத்திற்கும் ராமகிருஷ்ண சங்கத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இராமேஸ்வர திருக்கோயிலில் சுவாமி அக்கிராமத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஆங்கிலத்திலும், தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது. ராமகிருஷ்ண தேவரின் தந்தையார்

இராமேஸ்வரத்துக்கு யாத்திரை செய்தவர். அன்னையுமாய், கன்னியுமாய் விளங்கிய தூய அன்னை சாரதா இங்கு வந்து பர்வவர்த்தினி அம்மைக்கும், இராமநாத சுவாமிக்கும் பூசை செய்த பாக்கியம் பெற்றவர்.

இந்நாட்டு மறுமலர்ச்சியில் ஒரு புது மெருகையும் உத்வேகத்தையும், உணர்வையும் ராமகிருஷ்ண தத்துவம் அளித்துள்ளது. இத் தத்துவம் இந்நாட்டில் கண்ட மறுமலர்ச்சி ஆத்மீக, சன்மார்க்க, உடன்பாட்டு மறுமலர்ச்சியாகும். வைத்தீஸ்வர வித்தியாலயமே இந் நாட்டில் முதல் ஆரம்பிக்கப்பட்ட ராமகிருஷ்ண கலைக்கூடமாகும். சைவசமயம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன. கிழக்கிலங்கையின் கலங்கரை விளக்காம் சிவாநந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி என்பன இந்து சமயம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைப் கற்பித்தன. ராமகிருஷ்ண துறவிகளைப் பொறுத்த வரையில் கிழக்கு இலங்கையில் இருந்து நான்கு துறவிகளும், வட இலங்கையிலிருந்து மூன்று துறவிகளும் அறம் வளர்த்தார்கள்.; வளர்க்கின்றார்கள். இன்று சிவாநந்த வித்தியாலயத்தில் கற்ற ஒருவர் துறவிப்பட்டம் பெறுகின்றார்.

பாரதத்தில் 36 பல்கலைக் கழகக் கல்லூரிகள், பல மருத்துவமனைகள், நூற்றுக்கணக்கான கல்லூரிகள், பொதுப்பணி மன்றங்கள் இயங்குகின்றன. காந்தி அடிகள் கண்ட வார்தா கல்வித் திட்டம் சங்கங் கல்லூரிகளிலேயே செம்மையாக் காணப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களுக்கென இமயமலைச் சாரலில் சங்கம் ஒர் பல்கலைக் கழகம் நடாத்துகின்றது. மொறிசியஸ் குடியரசு, பிஜி குடியரசு ஆகியவற்றில் கல்வித் தொண்டும், சமூகத் தொண்டும் இச் சங்கம் ஆற்றுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் ஏறக்குறைய 40 ஆத்மீக பண்பாட்டுச் சங்கங்கள் இயங்குகின்றன. ஐக்கிய இராச்சியம், சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் நாடு, சிங்கப்பூர், ஆர்ஜென்டினு ஆகிய நாடுகளில் கல்விக் கூடங்கள், கலாசார நிறுவனங்கள் பல உள.

ஒரு நாடு, ஒரு மரபு, ஒரு பண்பாடு ஆகியவற்றிலே தன்னைக் கட்டுப்படுத்தும் மனிதன், தன் வளர்ச்சியை மட்டுப்படுத்துகிறுன் என்பது அறிஞர்களின் வாக்கு. இத்தகைய நோக்குடைய மனிதன் கல்வித் துறையிற் செல்வாக்கையும், பாதிப்பையும் விளைவிக்கும் பொழுது சமுதாயத்தின் வளர்ச்சியும், நாட்டின் வளர்ச்சியும் தவறுன வழியிற் சென்று உலக அமைதியையும், முன்னேற்றத்தையும் சீர்குலைத்து விடும். உலகில் எழும் போர்கள் மக்களின் உள்ளங்களில் தொடங்கப்படுத்திறுல் அவர்களின் உள்ளங்களிலேயே அமைதியின் அரண்கள் கட்டப்படுதல் வேண்டும். அமைதி வழுவாது நிலைநாட்டப்பட வேண்டுமாயின் அது மன்பதையின், தார்மீக, அறிவுத் திண்மைப்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். அமைதி வழுவாது நிலைநாட்டப்பட வேண்டுமாயின் அது மன்பதையின், தார்மீக, அறிவுத் திண்மைப்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும் எனும் விழுமிய தத்துவத்தன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் கழகம் அமைக்கப்பட்டது.

கல்வி, விஞ்ஞானம், பண்பாடு எனும் முத்துறைகளில் தன் நோக்கங்களுக்கு இயைந்த பணி ஆற்ற ஐக்கிய நாடுகள் கழகம், ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் எனும் நிறுவனத்தை 1945ஆம் ஆண்டில் தொடங்கியது. இது கல்வியல், விஞ்ஞானப் பண்பாட்டு அமைப்பாக உருவெடுத்தது. எல்லோருக்கும் கல்வி, முதியோர் கல்வியின் மூலம் அமைதி காணல், கலாசார வளர்ச்சி, அறிவியல் மக்கள் பொதுச் சொத்தாக விளங்குதல், தாய்மொழிக் கல்வி, இலவசக் கல்வி, கட்டாய கல்வி, சமூக சமத்துவம், இன மொழி வேறுபாடின்மை ஆகிய அம்சங்கள் இக்கழகத்தின் சாசனத்தில் இடம்பெற்றுள்ளன.

இச்சாசனத்தை ஆக்கும் பொறுப்பு பிரெஞ்சு நாட்டுப் போராசிரியர் ஒலிவேரு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பேராசிரியர் அவர்கள் அக்காலத்தில் பரிஸ் நகரத்தில் செயற்பட்ட ராமகிருஷ்ண வேதாந்த நிலையத்துறவி சுவாமி சித்தேஸ்வரானந்தா அவர்களே இச் சாசனத்துக்கு கரு அளித்தார்கள் என்று கூறி இவை அனைத்தும் 'ராமகிருஷ்ண வேதாந்த கருத்துக்கள் எனக் கூறியுள்ளார்.

உலகப் பொதுமை எனும் தத்துவம் இக்கழகத்தின் மூலம் விளக்கம் பெறுகின்றது. ஐக்கிய

நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம், உலகநெறி பேணும் இயக்கமாகும். இவ் இயக்கத்திற்கு அருகதையாகவும், உறுதுணையாகவும் பல உலக ஆத்மீக மனிதத்துவ பண்பாட்டு இயக்கங்கள் செயற்படுகின்றன. இவற்றுள் விசேசமாகக் குறிப்பிடத்தக்கது 'ஒன்றே உலகம்' எனும் தத்துவத்தை சமய சமரசம் மூலம் போற்றுகின்ற ராமகிருஷ்ண சங்கமாகும். ஏறக்குறைய 25 நாடுகளில் மூன்னூறு சங்கங்களோடு இயங்குகின்ற இச் சங்கம் ஐக்கிய நாடுகள் கழகத்தோடு இணைந்து செயலாற்றுகின்றது. பாரத நாட்டில் கல்கத்தா நகரில் நிறுவப்பட்டு ஆத்மீக, உயர்கல்வி, கலாசாரத் தொண்டு ஆற்றும் ராமகிருஷ்ண பண்பாட்டுக் கழகம், ஐக்கிய நாடுகள் விஞ்ஞான கல்விப் பண்பாட்டுக் கழகத்தின் இணைக் கழகம் என்று சொல்லப்படுகின்றது.

மனிதன் இயல்பிலேயே மற்றையோருக்கும் பொதுவானவன். ஆனுல் இப் பொதுத் தன்மையை வெளிக்கொணர மக்களைக் கற்பித்தல் வேண்டும். எல்லோருக்கும் பொதுவான மனிதன், தனது தனித் தன்மையை உதறித் தள்ளிவிட வேண்டியதில்லை. இத் தனித்துவம் சமூதாயத்திற்கு பயன்பட வேண்டும். மனிதன் பொதுவானவன் என்பதன் கருத்து, அவன் அனைவருக்கும் உரிய தனிமனிதன் ஆகும் எனப் பொருள்படும். எல்லோருக்கும் பொதுவாக விளங்கும் தன்மையை ஏற்கனவே அடங்கிய மனிதன், மென்மேலும் அத்தன்மையை அடைந்து கொள்ளுமாறு அவனுக்கு கல்வி ஊட்டப்பட வேண்டும். மனிதனின் அறிவு, உடல், சமூகப் பொதுமை ஆகிய வெளிப்பாடுகளைக் காண விழையும் வேதாந்த மரபு, மனிதன் தனது சொந்த இயல்பை உணர்ந்து கொள்ளுமாறு கோருகின்றது.

மனித வாழ்க்கையானது தன்னில் நிறை பேருக உள்ள தனது சொந்த ஆன்மீக இயல்பு பற்றி அறிவதாகிய அறிவில் நிறைவைக் காண்கின்றது. அறியாமை தனி ஆளை தனி ஆளிடமிருந்தும் குழுக்களை குழுக்களிடம் இருந்தும் நாடுகளை நாடுகளிடமிருந்தும் பிரித்து வைப்பதாகும். இப் பிரிவு, பிளவு உண்மையானது அல்ல. இது மேல் மட்டத்தில் மாத்திரமே உள்ளது. இம்மேல்மட்டத்தை ஊடறுத்து உள்ளே செல்வோமாயின் மனித குலத்தில் உள்ள அடிப்படை ஒற்றுமையைக் காண்போம். இந்த ஆழத்தைக் கடந்து செல்வோமாயின் எல்லாம் அந்த ஒன்றின் வேறுபாடுகளே என்பதைக் காண்போம். எனவே நமக்குத் தேவையானது மனிதன் தன்னைப்பற்றிய உண்மைகளை மீட்டுக் கொள்ளுதல் வேண்டும் என்பதாகும்.

இராமகிருஷ்ணரின் எண்ணக்கருவானது, மனிதன் தான் சுயமாக எவ்வாறு உள்ளான், தனது தூயநிலை யாது என்பதை உணரச் செய்கின்றது. ஆன்மீக உணர்வின் அடிப்படையில், தன் உணர்வு பெற்று அதுவே மிகச் சிறந்த வாழ்க்கை எனக் கொள்ளப்படும் பொழுது வாழ்க்கையின் சகல நன்மைகளும் அதை நோக்கிச் செல்ல வழிகாட்டுகின்றன.

"ஏடு கண்டறியேன் - ஏட்டில்
எழுத்தும் கற்ற அறியேன்
பாடிப் பாடியுனைப் - போற்றிப்
பணிவ தெப்படியோ"

என இறைவியை வேண்டி நின்ற தீர்க்கதரிசி, மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுக்கிருன் எனக் கூறுவது நமது சிந்தனைகளைக் கிளற வேண்டும். சம காலம் வேண்டி நிற்கும் தத்துவம் ராமகிருஷ்ண தத்துவமாகும்.



# விபுலானந்த சுவாமியின் முத்தமிழ் வித்தகம்
## (ஈழத்துப்பூராடனார் - க.தா.செல்வராசகோபால்)

விபுலானந்த சுவாமி என்று யாவராலும் அழைக்கப்பட்ட அடிகளாரின் மாணுக்கனுன புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர் நான் வாழ்ந்த இடத்திற்கு அருகாமையில் 300 யார் தூரத்தில் வாழ்ந்தவர். அவர் எனது ஆசிரியர். அவர் அடிகளார் நோய்வாய்ப் பட்டிருந்தபோது மீட்சிப்பத்து என்ெெருரு பதிகத்தைப் பாடினுர். அந்த பாக்களில் அடிகளாரின் சாதனைகள், போதனைகள் என்பன தெளிவாக்கப் பட்டிருக்கின்றன. நவரெத்தினச் சுருக்கமான அப்பாடல்கள் குரு சீட உறவுக்கு ஒரு இலக்கியம். அடிகளாரின் நூற்ருண்டு விழாவைக் கொண்டாடும் நாம் அந்த மீட்சிப்பத்தை நினைவு கூர்ந்து அவர் காட்டிய தமிழ்நெறி வழியிலே எங்கள் காலடிகளை எடுத்து வைப்பதால் மேலும் அவரது பணியின் விளைவு அதிகரிக்கும்.

அடிகளாரை ஒரு துறவி, தமிழ்ப்பணி செய்தவர், இசை, நாடகத் தமிழுக்குப் புத்துயிர் தந்தவர் என்றுதான் பலர் அறிவார்கள். அவர் ஒரு தேசியவாதி, காந்தியத்தில் அதிக ஈடுபாடுள்ளவர் என்பதை அவரின் வாழ்விற் பலநிகழ்வுகள் எடுத்துச் சொல்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானவற்றுள் அண்ணுமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது தேசியக் கொடி புறக்கணிக்கப்பட்டதால் தனது இல்லத்தில் அதனை பட்டொளி வீசப் பறக்கவிட்டார். காந்தியடிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது பல இளைஞர் களைத் திரட்டி மகத்தான வரவேற்புத்தந்தார். பாரதியாரின் தேசியப் பாடல்களில் ஈடுபாடுற்று முதன்முதலில் பாரதியாருக்கு ஓர் மன்று தமிழகத்தில் அமைத்தார். இவையெலாம் அக்காலத்தில் ஆட்சி செய்த ஆங்கிலேயருக்குப் பிடிக்காத காரியங்கள் மாத்திரமல்ல தடைசெய்யப்பட்ட காரியங்களுமாகும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது அடிகளாரின் தேசியப் பற்று, சுதந்திரதாகம் எத்தகையது என்பது புலனுகும்.

அகம் புறம் என்னும் இருதிணை வகுப்பும் இயல் இசை நாடகத் தமிழ் எனும் மூவகை மொழி பகுப்புங் கொண்டு உலகில் எம்மொழியிலும் இல்லாத தனிச் சிறப்புடன் திகழ்வது தமிழ்மொழி. இத்தமிழ் மொழி புலவர்களாற் காலத்துக்குக் காலம் ஆராய்ந்து தக்கதெனக் காணப்படாதவை நீக்கப்பட்டு, தகுதியானவை எனத் தோன்றியவை ஏற்கப்பட்டு வளர்ந்த ஒரு செம்மொழி. வடக்கிருந்து வந்து புகுந்து சற்றுக் காலம் தமிழகத்திலே தலையெடுத்த பவுத்தம் சமணம் ஆதிய உலக ஆசைகளை முற்ருக வெறுத்தொதுக்கும் சமயங்களின் அதிகாரத்தால் முத்திக்குத் தடையாக இருக்கும் என்று அவர்கள் கருதிய இசையுங் கூத்தும் நாளடைவில் அழியத் தொடங்கின. அதற்கான இலக்கண இலக்கியங்கள் அழித்தொழிக்கப்பட்டன.

இதனுல் பழைய பல நாடக இலக்கண இலக்கியங்களும் இசை நூல்களும் மறைந்து போயின. பெருநாரை, பெருங்குருகு, மாபூத புராணம், வியாழ மாலை என்னும் அரிய தமிழிசை நூல்கள் இருந்தஇடமே இல்லாது மறைந்தன..இது நடந்து பல நூற்ருண்டுகளுக்குப் பின்னரும், அத்தகைய ஒரு அழிவுக்கு ஏதுவான அதிகாரப் பிடிப்பு இல்லாது போன போதிலும், இழந்துபோன இசை நாடக இலக்கண இலக்கியச் செல்வங்களை மீண்டும் படைக்க எவருமே முன்வரவில்லை இது இக்கால கட்டத்தில் வெளிவந்த இசை நாடக நூல்களின் தொகையைக் கொண்டு அறியலாம். மதங்க சூழாமணி எனும் அடிகளாரின் நூல் வெளியீட்டுக்கு முன்னர் தமிழ் நாடக இலக்கண வகையில் எந்த நூலுமே இருந்ததில்லை. இதன்பின்னரே பரிதிமாற் கலைஞரின் நாடகவியல் வெளிவந்தது. அதுபோலவே இசைத் தமிழ் நூல் எதுவுமே இருந்ததில்லை. அக்குறையையும் அடிகளாரின் யாழ் நூல் தீர்த்து வைத்தது.

இவ்வாறு இசை நாடகத் தமிழ் இலக்கண நூல்களில்லாக் குறையை அகற்றுவதற்காக ஒரு முத்தமிழ்ச் செல்வனை தமிழ் அன்னை தந்தாள். அந்தத் தமிழ் மகன் விபுலானந்த அடிகள் எனும் பெயருடன் உலகப்பற்றற்ற துறவியாக வாழ்ந்தாலும் முத்தமிழ்ப் பற்றுற்று பயன்பட வாழ்வாங்கு வாழ்ந்தார்.

அடிகளார் ஒருசில நூற்கள்தான் படைத்தாலும் பல கட்டுரைகளைப் பத்திரிகை மூலமும், சொற்பொழிவுகள் மூலமும் காலத்துக்குக் காலம் படைத்தே வந்துள்ளார். இலைமறை கனிகளாக இருந்த இவற்றை அருட் செல்வநாயகம் என்பவர் திரட்டி பல தொகுதிகளாக வெளியிட்ட போதுதான் அவற்றின் கனதி தமிழுலகின் கண்களிற் பட்டது .அவர் தொகுத்த கட்டுரைகள் கவிதைகள் போக இன்னும் பல கட்டுரைகள் தொகுக்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. இன்று வெளிவரும் ஆய்வு நூல்களோடு ஒப்பிடும்போது இக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஒரு முழுமையான நூலுக்குச் சமமானவை என்பது புலனுகும்.

இக்கட்டுரைகளை நாங்கள் உற்று அவதானித்தால் அடிகளாரின் மனவியல்பை ஓரளவு

அறிந்துகொள்ளலாம். அவரின் மனதில் தமிழ்மொழி பற்றிய பற்று இருந்தது. மறைந்து போன இசை நாடகத் தமிழை பண்டை நூல்களில் ஆராய்ந்தும் மற்ற மொழிகளுடன் ஒப்பிட்டும் உயிரூட்ட வேண்டும் என்ற பேரவா இருந்தது. இதைவிட உலகில் உள்ள மொழிகளுடன் ஏற்றத் தாழ்வின்றி சமமாகத் தலை நிமிரும் தகுதி தமிழுக்குண்டு என்பதை நிரூபிக்கும் ஆவேசம் இருந்தது. இதற்கான கருத்துகள், செயற் திட்டங்கள், என்பனவற்றைத்தான் அவரது கட்டுரைகளிலே காணலாம்.

சொல்வதோடு அடிகளார் நின்றுவிடவில்லை அவற்றைச் செயற்படுத்தவும் சாதனையிற் காணவும் முயன்றார். தமிழில் இல்லாத இசை நாட இலக்கணக் குறைகளை வடமொழி ஆங்கிலமொழி முதலிய நாடக நூல்களை ஆராய்ந்து பண்டைத் தமிழ் இயல்புகளை உணர்ந்து மதங்க சூழாமணி எனும் நாடகத் தமிழ் நூலை உருவாக்கி மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார். (இம்மதங்க சூழாமணியை ஆராய்ந்து அதன் முதற்பகுதியின் அனுசரணையோடு 800 வெண்பாக்களால் கூத்தர் வெண்பா என்ற நூலை நான் வெளியிட்டேன். பிற்பகுதியைக் கூத்தர் விருத்தம் என்ற நூலாக வெளியிட்டேன். இவ்வாறு இந்த நூல் மீள்பதிப்பாயிற்று என்பது இங்கு சிந்தையிற் கொள்ளத்தக்கது.)

அடிகளார் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவிற் பிறந்தார். ஆங்கிலக் கல்வியைக் கற்றாலும் அவரது பிறந்த மண்ணிற் பேணப்பட்டு வந்த தமிழ் ஏடுகள் அவரிற் தமிழ்ப் பற்றை உண்டாக்கிற்று. ஆங்கிலங் கற்றவர்கள் தமிழ் மொழியை அலட்சியஞ் செய்த காலத்திற் பிறந்த அடிகளார் ஆங்கிலத்தையும் தமிழையும் இரு விழிகளாகவே மதித்துத் தனது கல்வியில் மேம்பட்டார். விஞ்ஞானத் துறையில் மேம்பட்ட இவர் மெஞ்ஞானத் துறையிலும் சிறந்து விளங்கினார். அதே வேளை தமிழ்த் துறையிலும் வல்லவரானார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த்துறையை நிறுவி தமிழ்ப்பீடத்தின் தலைவராகத் தமிழ்ப்பணி செய்தார்.

அடிகளாரையிட்டு நாம் நினைவுகூரும்போது ஒரு முக்கியமான அம்சம் தெளிவாகும். அதாவது ஒரு மனிதனிக்கு உணவு, உடை, உறையுள் எவ்வளவு அத்தியா வசிய தேவைகளோ அதுபோலக் கல்வியும் மிகவும் அத்தியாவசியமான தொன்று என்பதாகும். (வைகாசி என அழைக்கப்படும் வை.கா.சிவப்பிரகாசம் அவர்களால் எழுதப்பட்டு மட்டக்களப்பு விபுலானநத்ர் இசை நடனக் கல்லூரித் திறப்பு வைபவ நினைவாக என்னால் பதிப்பிக்கபபட்ட விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள் எனும் நூலில் இக்கருத்தின் விளக்கத்தை விரிவாகக் காணலாம்.) அதுவும் அக்கல்வியின் நோக்கம் கசடக் கற்றபின் அதற்குத்தக நிற்க வேண்டும் இறைவனின் நற்றாள் தொழ வேண்டும். என்னோற்றான் இவன்தந்தை எனவும் அவையில் முந்தியிருக்கச் செய்வது எனவும் வாழ அக்கல்வி வழிகாட்ட வேண்டும் என்று கண்டறிந்தார். அதனை நடைமுறைப்படுத்த தனது பெரும்பாலான நேரத்தை கல்விச் சீர்திருத்தத்திலும் கல்வியகங்களை ஆரம்பப்பித்திலும் அநாதைகள் கல்வியறிவைப் பெறும் இல்லங்களை ஆக்குவதிலும் மதக் காழ்ப்பற்ற கல்வியை எங்கும் பரப்புவதிலும் செலவிட்டார். இத்துறையில் அவர் அமோக வெற்றியுங் கண்டார். ( இதனை எனது விபுலானந்தர் பிள்ளைத் தமிழ் என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளேன்.)

அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை அவரது பணிகளை வைத்து வரையறுத்தால் எல்லாத் திசையும் ஒளிவிடும் கதிரவனைப்போல இல்லற வாழ்க் கையைவிட மற்றெல்லாவித வாழ்க்கையிலும் பரந்திருப்பதைக் காணலாம். தனது துறவற வாழ்க்கை மற்றவர்களுக்கு வழிகாட்டியாக மாத்திரமல்ல பயன்தரக்கூடியதாகவும் அமைய வேண்டுமென்ற உந்துதல் அவரின் தூய வாழ்விற் பரந்திருந்தது. தனது உற்றவர்கள் கூட மற்றவர்களுக்குச் சமமாகவே அவரால் மதிக்கபபட்டனர். இதனை அவரது மருகனும் என்னுடன் மாணுக்கருமான அமரர் பூ, சுந்தரம்பிள்ளை அடிக்கடி கூறுவதுண்டு.

கிழக்கிலங்கையில் அவதரித்து இமயம் வரை புகழ் பெற்ற அவர் தனது சமரச மதப்பணியால் மற்றவர்கள் எம்மதத்தவராய் இருப்பினும் அம்மதத்திலே பற்றுக் கொள்ளும் ஆசையை மூட்டிப் பக்தி அனலை வளர்த்தார். ஆங்கிலத்தில் நடாத்திய பிரபுத்த பாரதம் தமிழில் நடாத்திய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் எனும் சஞ்சிகைகளுக்கு ஆசிரியராக இருந்து அவற்றின் மூலம் தமிழரின் தத்துவ ஞானத்தை ஏனைய மதத்தவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

1892ம் ஆண்டில் அவதரித்த மயில்வாகனார் தமது மனுநேயப் பணியை விபுலானந்தராகச் சிறப்புறச் செய்து 1947ம் அமரரானார். அவர் வாழ்ந்த காலமோ சிறியது. ஆனால் சாதித்த காரியங்கள் அளவிடற்கரியன. அவற்றுள்ளும் இன்றும் மற்றவர்களின் சாதனையால் மேற்கொள்ளப்படாத காரியங்கள் அநேகம். நான் பிறந்த மண்ணில் அவதரித்த அடிகளாரை நான் நேரிற் காணும் பாக்கியம் பெற்றிருக்கா விட்டாலும் அவரது மரண ஊர்வலத்திற் பங்குபற்றி பூதவுடலைச் சமாதியில் வைக்கப் படும்போதுதான் அவர் திருவுருவத்தைக் கண்டேன். ஒரு சில நிமிடங்கள் கண்டபோதும். அவரது சாந்தம் திகழும் முத்தமிழ் முறுவல் பூத்த வதனம் இன்றும் என்கண்களில் நிறைந்துகொண்டே இருக்கின்றது.

# SWAMI VIPULANANDA

OPENING SONG

**Singer -**

The full moon sheds her gentle light
Deep into the silent night;
A Helmsman stills his vessel's sway
As peace lulls the Batticaloa Bay.

Music notes! from unseen 'Nymphs'
All aligned in tuneful strings;
Melody flows from mystique keys
And stirs the sailor's depths of peace.

Into the crystal deep he peers
To see the silent beings he hears;
Flowing notes feel fluid's depth
A rapture holds the seer's breath.

He brings to light a lost science
The subtlest notes of Harp's nuance;
God's will in man to well enact
Inspired life; for, 'THOU ART THAT!'

Companion - Beautiful Song

Singer - Beautiful story too! Swami Vipulananda's life belong to our times. The famous Tamil epic Silappathikaram by sage poet Ilanko Adikal, belongs to the last Tamil Sangam period. Rare treatises were lost when Southern Tamil Territory *(தென் தமிழ் நாடு)* sank beneath the sea.

For two thousand years no scholar could explain the section in the epic wherein several intricate nuances of musical scales were described. Various forms of Harps and their performing power were sung with poetic beauty and clarity.

Inspired by the mysterious 'singing fish' off the eastern coast of Sri Lanka, Swami Vipulananda unravelled the meaning explaining the subtle rhythmic scales and nuances of notes with mathematical precision.

He also reconstructed the harps of varied forms and showed how to play the scales on them. Clearly and comprehensively he gives the results of his research in his book, 'Yarlz Nool'.

Singer - Singing fish! ? ? Fantasy!

Singer - When deep truths manifest, it is unbelievable. They seem fantasies.

Companion - I am not an unbeliever. But, how.........can.........fish.........sing.........?

Singer - Fish emit sound vibrations; the frequencies of their wave lengths are too high for human reception.

Companion - That's to say - Swami Vipulananda was a super genius!
Is it not strange that - what was long lost in the sea
That was later found in the sea?

**Singer** - You are right only those who are perfect are capable of such wonderful deeds. Only a spiritual genius can reveal them.

Companion - It feels good to listen to truely remarkable storie.

Singer - Yes. They open up your heart to truth - pure love.

(feels inspired and sings)
The ocean deep and mighteous,
Can never sink the righteous.

Companion - (in a sing-a-song way)
Oh no! no! no! That's crazy.............Can't you see?

Singer - I mean the ocean of samsara - life's rounds of birth and death.

(A flash of memory and understanding lights up his face. He corrects himself.)

Ah! did not the sea part itself to let Moses and his people through?...........and the sea kept afloat Saint Thirunavukkarasu who was bound to a stone pillar and lowered into the sea!

(sings)

Listen! Hearing truth requires
Silent yearning; the heart aspires.
A pure and simple life apart
Comes from love of God at heart

Love and hate is love in waste
Holy love does keep you chaste.

Companion - Oh......yeah ! ..... Does that sound true ! .....? But how do you break through?

Singer - I'll sing the song of Swami Vipulananda. You shall see just just one pure life can accomplish.

(sings)

Do listen. Listen to the wise.
Wisdom is God's precious prize
For those who love and kindly serve
7 And from the truth will never swerve

Companion - Could you define wisdom please?

Singer - It is that power of thought that is motivated by pure love. A union of head and heart. Pure intelligence is helpless without love.

(sings)

Human life's a treasure
Devotion is its measure
Services to humanity
Without any disparity
Brings joyous peace
8 The soul's release.

Companion - Do you mean everyone who serves selflessly gets God realization?

Singer - That is so. God is all. Everything is made through His Supreme Will and provided for by Him. His infinite love unfolds in selfless service. Today we shall remember this truth in the life of Swami Vipulananda, a great Tamil son of Sri Lanka.

(sings)

So.....ham......So.....ham......thus echo
The ocean waves......encore......encore.
Keeping time with life's rhythm
9 Flowing unseen deep within.

The bountries of the sensory world
In grandeur are forever unfurled;
Its' God's own Gracious Master Game
10 Chanting, thank Him ! - through His Name !

A little boy loving and bright
Gave his parents great delight
Nature nurtured in His heart;
11 Love of creation ! Greatest Art !

Companion - Oh ! and then ?

Singer - Sirinathamby gave his care
A learned father's banner to bear.
Renown books were means to gain
12 Sublime thoughts as cure for pain.

Through obedience knowledge thrived
Mylvaganan the student strived.
To earn the best of Tamil learning
13 The son indeed ! had great yearning.

In the time that quickly passed,
Treasured learning he amassed.
He advanced with amazing zeal
14 And won the Madura Pundit Seal!

Companion - Wow ! I wish every student could do that !

Singer - 'Kannammai' was one good name
Mother and deity were the same
Tender care that love delights
15 In religious fervour and temple rites

That ideal home was rare to find
That finely tuned his heart and mind
Serving well his life to mould
16 In wisdom's light to dispel gloom.

Companion - Can one life be blessed with all good fortune?

Singer - That's how a soul evolves toward perfection
He had done such good deeds in his lives
that all blessings began to flow into his
17 heart.

Companion - (Brightening with understanding.)
Is that why Sri Devi is depicted as residing in the heart of Vishnu?

Singer - That is so. It is the pure strong will of the individual self. If the individual will is absent what good can the best environment do?

(Continues to sing)
Untiring will aspires to scale
Heights of learning - heroic tale.
He avanced with amazing zeal
17 And won the Madura Pandit Seal.

Over the rocks of yogic path
He neatly climed in Almora Math
Sri Ramakrishna's order found
To guide mankind to maya bound

Sanctified with ochre robe -
Symbol of religion - people's hope;
The joy of life to share with all,
19 'Vipulananda' rushed to the call.

Companion - (looking up wistfully)

I wish I could be a yogi. But, why do you call him peoples hope?

Singer - Pure love comes from renunciation and devotion. It is compassion. It flows as merciful care from his heart into the heart of those who come to him seeking peace in their own lives.
A yogi is just a channel for God's Grace.

(sings)

A scholar and saint with unique mind.
Anna's Tamil Chair he refined;
Inspired fellows followed out
20 To serve the poor that huddled about.

High on chair for Tamil Thought
A rustic bard to honour he sought
Of purest heart, he saw the bold
21 Indian goals in modern world.

Stirring songs from Bharathy's pen
Proudly scorned by learned men
music flowed from concert fete
22 And rouse the lay to heaven's gate !

All his students did thus imbibe
Sri Ramakrishna's spirit alive.
His countrymen now justly claimed
23 This beloved son whom all acclaimed.

Undergrads were magnetised;
Specialised fields were spiritualised
Welling in wisdom did excel
24 Loving him dearly served him well.

Companion - What an ideal teacher ! What fortunate students. A Gurukulam in the university ! If that kind of educational system could be established, earth would be heaven !

Singer - Certainly ! Swamiji's students served their homes, society and country so dedicateldly that it was a golden period in the history of Sri Lankan Tamils. Fearless, wise and good they helped to salvage their rich heritage during and after the British rule.

Companion - Ha ! Knowledge is true freedom. When will the whole world enjoy that heaven? It needs it now!

Singer - Tagore the Indian Poet and Swamiji's contemporary envisioned that freedom for his country in his Gitanjali. Visions are a far cry from true life experience. Living in knowledge is the true life That canot happen like a bolt from the blue. God through Nature in each life will gently unfold that wisdom to all. Let us be thankful for the gift we have been graced with by Sri Ramakrishna Paramahamsa and his desciples. Evolving in knowledge is not an overnight happenning. We mortals want our visions to be realized within our lifetime. That zeal is good..........
The all knowing God is timeless.

(sings)
With yoga made strong and tall,
One good job was far too small.
He dived into the source of sounds
25 Where their symbols lose their bounds.

Sea nymph's notes beneath the Bay -
Music's flow in heavenly way !
Music's labour - moods to bear
26 Charming men to make them fair !

Mystified what beings could cause
Sublime notes that made hearts pause
'Vipulanandam' unravelled right
27 Music keys lost out of sight.

Comp. How was he able to discover the lost keys

Singer - Well, Swamiji was not only a literary scholar. He was a great mathematician too with English qualification. The music from the unseen beings was so perfect in rhythm and so tuneful and sweet that Swamiji named the unknown cause 'Sea Nymphs' a gesture of respect for purity of the tune - for which he composed a song with ideas befitting only them. He later sat on the beach for days, writing on the sand his calculations as he researched into the scales mentioned in the Tamil epic applying to it the scales he heard from the Sea Nymphs. He won bringing out the decimal fractions of the rhythms.

(continues to sing)

The subtlest notes he thus reclaimed;
'Dravada Music!' the world acclaimed.
His pure intellect thus excelled
28 Serving God - his spirit revelled.

Orphans young and outcastes poor
Merciful care to all ensure
Maths and schools he built to teach
29 Life's great wisdom out of reach.

God's Holy Order claims as God
The meek or rich to all applaud
That life's a gift for all the same
30 Serving in His Name's - true fame.

Willed is all as wondrous sport;
Life in each becomes a note.
When tuned to LOVE in harmony
31 In His Great Grand Symphony !

Holy lives bring help to raise
Humble seekers' hearts to praise
God's pure love that comes unsought
32 When life's best gifts are brought to nought,

Giving up homeland's warming wing,
All creeds love's brood in Truth to sing,
As Mother Grace whose weaving forms
33 Is Gentle Peace pervading storms.

Each singular, all aligned;
To teach HIS FIND, as Names assigned,
The Master sparked off stars to light
34 Lonely paths in distant night.

Purest Love is the Holiest Sight
Mute witness in mount or mite.
Profound Being ! Beyond all Names
35 Thank Him ! Chanting Holy Names.

Loving thus His living role
Entered life's External Soul
'Vipulananda!' Eelam Born
36 Inspired us as the light of dawn !

Om Shanti !
Om Shanti !
Om Shanti !

# இராமகிருஷ்ண சங்கம்
# கனடா கிளை

ரொரன்ரோ வேதாந்த சங்கம் என அழைக்கப்படுகிறது. இது ஒரு சங்கமாக 1969ம் ஆண்டு சுவாமி ரங்கானந்தாவினுல் அங்குராப்பணம் செய்யப்பட்டு சிகாகோ விவேகானந்த வேதாந்த சங்கத் தலைவரின் உதவியோடு பணிபுரிந்து வந்தது. 1988 ஒக்டோபரில் இந்தியா இராமகிருஷ்ண சங்க தலைமைப் பீடத்தால் கனடாக் கிளையாக ஏற்கப்பட்டு 1989 மார்ச் மாதம் ஸ்ரீமத் சுவாமி பிரமதானந்தாஜி மகராஜ் தலைவராக கடமையேற்ருர்.

அவரது தலைமையில் சிறப்பாக சங்கம் பணிகளைத் தொடர்ந்து வருகிறது. அங்கத்தவராகச் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சேவை விபரம் வேறொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

**சரஸ்வதி தேவி கணேஸ்வரன்**
செயலாளர்
696-55001

**வேதாந்த சங்கம்**
566-5775

# விபுலானந்தரின் யாழிசை

## ஆக்கியவர்: வல்வை கமலா பெரியதம்பி

அன்பு, அறிவு, ஆனந்தம் என்னும் மூன்றின் வடிவமே விபுலானந்தர். அமர உலகில் அழியாப் புகழுடன் விளங்கும் பெருந்தகை. செயற்கரிய யாவும் செய்த செம்மல் அவர் தம் வாழ்வே மானிடர் தம் வாழ்விற்கு ஒரு வரைவிலக்கணம். மனித நேயம் அவரது ஜீவநாதம். அவர்தம் உடல் ஒரு இனிய யாழ். அதில் கோயில் கொண்டிருந்த ஆன்மா அதன் நரம்புகளின் கோவை. மதம், மொழி, கலை, கலாச்சாரம் என அதில் எண்ணற்ற நரம்புகள். அவற்றை மீட்டிய கலைஞன் அந்தக் கைலாசநாதன்!, அந்த யாழிசை தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஓயாது, ஒளியாது இன்னும் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

ஐம்பெரும் காவியங்களுள் தலையாயது சிலப்பதிகாரம். அது அச்சேறிய ஆண்டில் அவதரித்தது ஒரு ஆசிய ஜோதி. அதுவும் மீன்பாடும் மட்டுநகர் சார்ந்த காரைதீவினிலே. கண்ணம்மையாரின் மணி வயிற்றிலே தேடிவந்துதித்தது. ஈழநாடு செய்த தவப்பயனால் "மயில்வாகனன்" என்ற பெயருடன் வளர்ந்தது. அவனியில் ஒரு அரிய சாதனை ஆற்றலே இத்தகைய அவதார புருஷர்கள் தோன்றுவது வழக்கம். சிலம்புச் செல்வி கண்ணகியைக் குலதெய்வமாக வழிபட்ட கண்ணம்மைக்கு அச்சிலம்புச் செல்வத்தைப் போற்றிக் காக்கவே அந்தத் தவப்புதல்வன் உதித்தான். இளமைப் பருவம் தொட்டே அக்காப்பியத்தில் ஆர்வம் காட்டிய அச்செல்வன் அந்தச் சிறுவயதிலேயே அரிய கவிதைகளைப் பாடும் திறன் பெற்றான். கற்பின் கனலாம் கண்ணகி கல்வி, கலைச் செல்வங்களை அள்ளி அள்ளி வழங்கினாள்.

வாலிபப் பருவம் எய்தும் முன்னமே மயில்வாகனர் வையகம் போற்றும் சாதனைகளை இயற்ற ஆரம்பித்துவிட்டார். பன்மொழிப்புலவர் ஆனதோடு பல பட்டங்களைத் தம் அயரா முயற்சியால் தேடிக் கொண்டார். விஞ்ஞானம், கணிதம், பொறியியல் ஆகிய அனைத்தையும் கரை கண்டார். ஆயினும் மொழி, மதம், மக்கள், சேவை ஆகிய மூன்றுமே அவர் இதயத்தை ஈர்த்தன. பேராசிரியராகவிருந்த வேளையில் சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக் காதையில் யாழாசிரியனின் அமைதி கூறும் வரிகள் விபுலானந்தரின் உள்ளக் கமலத்திலே யாழ் பற்றிய ஆராய்ச்சி செய்ய விழைய வித்திட்டன. அதுவே வளர்ந்து அவரது வாழ்வின் உன்னத லட்சிய விருட்சமாகியது. கல்விச் சேவையே உயிர்மூச்சாகவிருந்தும் யாழ் ஆராய்ச்சி அந்தப் புனிதரைக் காந்தமெனக் கவர்ந்தது.

யாழ்களில் தான் எத்தனை வகை! நாரத முனிவரின் 'மகதி' என்னும் யாழ். வாணியின் கை வீணை. மாதவி மீட்டிய சகோடயாழ், பேரியாழ், மகர யாழ், முளரி யாழ் எனப் பலவகை யாழ்கள் பழந்தமிழிசையில் கூறப்பட்டுள்ளன. அத்தூய தமிழிசை குறித்து சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற காப்பியங்கள் பல குறிப்புகள் கூறுகின்றன. வழக்கொழிந்த அத்தமிழிசையை அடியோடு அற்றுப்போய் விடாது காத்தவர்கள் தேவாரம் பாடிய ஓதுவார்கள். யாழினால் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்தில், யாழ் குறித்த ஆய்வு செய்ய விழைந்த சுவாமி விபுலானந்தர் தம் அயராச் சேவைகளால் அழியாப்புகழ் நாட்டினார். தமிழ் நாடெங்கும் அன்னாரது புகழ் பரவியது. தேனூறும் விபுலானந்தரின் செந்தமிழ் உரைகளுக்கு மக்கள் யாவரும் நாவூறி நின்றனர். அவர் இயற்றிய கலைச்சொல் போல சுவாமிஜி ஒரு நடமாடும் 'செழுங்கலை நிலையமெ'ன விளங்கினார். 1944ம் ஆண்டில் நெருப்புக் காய்ச்சல் அவரது உயிரைக் கவர முயன்றது. தமிழ் உலகம் செய்த தவத்தால் அவர் உயிர் பிழைத்தது ஒரு அற்புதமே. தன் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்ததும், விபுலானந்தர் தம் ஆராய்ச்சிகளின் விளைவான 'யாழ்நூலை' காலம் தாழ்த்தாது வரையலானார். தமிழிசைக் கலைக்கே அந்நூல் ஒரு வரலிக்கணமாகியது. வழக்கொழிந்து போன தூய தமிழிசை நூலிற்கு இலக்கணம் வகுத்தார் சுவாமிஜி. 103 தமிழ்ப் பண்களுக்கு உருவம் அமைத்தார். இன்று அவற்றுள் 32 பண்களே ஓதுவார்கள் வாயிலாக வாழ்கின்றன. இசைக்கலையின் தனிச்சிறப்பு 'சுருதிபேதம்' எனப்படும் யாப்பில் அமைந்துள்ளது.

ராகங்களின் உருவை நிர்ணயிப்பவை அவற்றின் ஆரோகண அவரோகணங்கள், அவற்றில் வரும் ஒவ்வொரு ஸ்வரத்தையும் முதலாகக் கொண்டு மறு ஸ்தாயியில் அதே ஸ்வரத்தை முடிவாகத் தொட்டால் இன்னொரு ராகம் உருவாகும். அந்த ராகங்களை யாழ்போல் நரம்புக் கருவிகளில் மீட்கும் போது அலகுகள் ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்ட தொகை அதிர்வுகள் தோன்றும். திறமை வாய்ந்த யாழ் வித்துவான்கள் ஒரு மெட்டிலேயே ஏழு ஸ்வரங்களையும் மீட்ட வல்லவர்கள். அவர்கள் விரல்கள் செய்யும் ஜாலத்தில் தான் எத்தனை நுணுக்கங்கள்! ஒவ்வொரு வகையான மீட்டுக்கும் நரம்பின் அதிர்வுகள் மாறுபடும. அவற்றிற்கிசைந்த நாதம் எழும்.

இவ்வதிர்வுகளை இம்மி பிசகாமல் கணக்கிட்டுக் கூற அபாரமான இசை ஞானத்துடன் அரிய கணித ஞானமும் வேண்டும். தேவ கானம் பாடும் அனைவருக்குமே இவையெல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை. இசையில் உயர்ந்த பட்டங்கள் பெறுவோர்கள் மட்டுமே இவ்வகை இசையிலக்கணங்களை ஓரளவிற்கேனும் அறிய வல்லவர். கலைவாணியின் பூரண கடாட்சம் பெற்ற ஒருவருக்குத்தான் இசைத்துறையின் மிக நுண்மை செறிந்த இவ்விலக்கண வகுப்புகள் புலப்படும். இத்தனை சிக்கல் வாய்ந்த ஒரு துறையில், தம் அயரா முயற்சியால் பல்லாண்டுகள் ஆராய்ந்து, ஆயிரம் தந்தியுள்ள யாழை மீட்டும் தத்துவத்தை தெட்டத் தெளிவாக விளக்கிய பின்பே பிறவிப்பயனை எய்தினாற்போலக் களிப்படைந்தார் சுவாமி விபுலானந்தர்.

அதன் விளைவாக 'யாழ்நூல்' உருவானது. பாயிர இயல் முதல் ஒழிபியல் வரை ஏழு இயல்களைக் கொண்டது அந்நூல். திருக்கொள்ளம்பூதூர் அழகிய நாச்சியார் முன்னிலைப் பரவலோடு ஆரம்பித்த அந்நூலை, 1947ம் ஆண்டு ஆனி 5ம், 6ம் திகதிகளில், ஆயிரமாயிரம் தமிழ் இதயங்கள் போற்றிப் பரவ, அதே திருக்கொள்ளம் பூதூரில் அரங்கேற்றினர். விபுலானந்தரைப் போல் திருக்கைலாய யாத்திரை செய்ய வல்லவரால்தான் இத்தகைய ஒரு சாதனையை ஆற்ற முடியும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இன்று யாழை மீட்டி, யாழ் பற்றி ஆய்வ் எழுதிய பொற்கைகள் பொன்னுலகுக்கு ஏகி விட்டன. ஆனால் மண்ணுலகு உள்ளவரை சுவாமி விபுலானந்தரின் மாண்பு மிகு புகழ் மறையாது இம் முதல் நூற்றாண்டு விழா தொட்டு பல நூற்றாண்டு விழாக்கள் தொடரும். காலம் காலமாகத் தமிழ் ஈழத்தின் புகழை விபுலானந்தரின் யாழிசை மீட்டிக் கொண்டே இருக்கும்.

**வாழ்க சுவாமி விபுலானந்தரின் நாமம்!**
**வளர்க அன்னாரின் யாழ் நூலின் புகழ்!**



# இராமகிருஷ்ண மிஷன் வளர்ச்சியில் விபுலானந்தர் ஆற்றிய பணிகள்

திருமதி. பாலம் லக்ஷ்மணனின் நல்லெண்ணத்தால்
**மறைந்த திரு.கி.லக்ஷ்மண ஐயர்** கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொன் விழாவிற்கு எழுதிய கட்டுரைத் தொடரில் சுவாமி விபுலானந்த அடிகளார் ஆற்றிய பணிகள் பற்றிய கட்டுரையை அவரின் ஞாபகமாக இங்கு தருகிறோம்.

**கொ**ழும்பு இராமகிருஷ்ண மிஷன் தனது பொன் விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வாரத்திலே ·

அகில இலங்கையிலும் இராம கிருஷ்ண இயக்கத்துக்கு அடி கோலியவரும் அதன் ஆரம்ப ஜீவநாடியாகத் திகழ்ந்தவருமான, சுவாமி விபுலானந்தர் ஆற்றிய அரும் பணிகளுட் சிலவற்றையாவது நினைவு கூர்வது இன்றியமையாததாகும்.

இலங்கை அன்னை இராமகிருஷ்ண மிஷனுக்கு அளித்த தலைசிறந்த தவப் புதல்வர் சுவாமி விபுலானந்தர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சென்ற வாரக் கட்டுரையிலே, கொழும்பு ஆச்சிரமத்தைத் தொடங்குவதிற் சம்பந்தப்பட்டவர்களுள் சுவாமி சிவானந்தாவும் சுவாமி சர்வானந்தாவும் முக்கியமானவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தோம்.

அந்த இருவருமே சுவாமி விபுலானந்தரது துறவு விஷயத்திலும் முக்கியமானவர்கள் என்பது வியப்பாயிருக்கலாம். ஆயினும் அவர்கள் வகித்த நிலைகள் மாறியுள்ளன.

கொழும்பு ஆச்சிரமம் உருவாவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தியவர் சுவாமி சிவானந்தர். அதனைத் தொடக்கி வைத்தவர் சுவாமி சர்வானந்தர்.

ஆனால் சுவாமி விபுலானந்தர் துறவு சம்பந்தப்பட்ட மட்டில் அதற்குரிய சூழலை ஏற்படுத்தியவர் சுவாமி சர்வானந்தர். துறவை வழங்கியவர் சுவாமி சிவானந்தர். இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சீடர்களுள் ஒருவர் என்பதைச் சென்ற வாரக் கட்டுரையிலே குறிப்பிட்டிருந்தோம்.

தொடக்கத்திலே சுவாமி விபுலானந்தருடைய உள்ளத்தைக் கவர்ந்தவர் சுவாமி சர்வானந்தர். இவர் சென்னை இராமகிருஷ்ண மிஷன் தலைவராயிருந்தவர். 1915 தொடக்கம் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வந்து ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள் பற்றி உபந்நியாசங்கள் செய்தவர். இவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் அபூர்வமான சக்தி ஒன்றிருந்தது.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகவும், பின் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றிய பண்டிதர் மயில்வாகனத்துக்குச் சுவாமி சர்வானந்தரோடு ஏற்பட்ட தொடர்பே அவர் தம் பதவிகளைத் துறந்து சென்னைக்குச் சென்று 1922இல் சென்னை இராமகிருஷ்ண மிஷனில் சேரவும், 1924இல் சுவாமி சிவானந்தரிடம் சன்னியாசம் பெற்றுச் சுவாமி விபுலானந்தர் என்ற திருநாமம் பூணவும் காரணமாயிருந்தது.

சுவாமி விபுலானந்தருடைய சிறப்புகளுட் சிலவற்றை மூன்று என்ற இலக்கத்தோடு தொடர்பு படுத்திக் கூறலாமெனத் தோன்றுகின்றது.

அவர் பாண்டித்தியமும் பட்டமும் பெற்றது மூன்று துறையில். தமிழிலே அவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்; விஞ்ஞானத்திலே லண்டன் B.Sc. பட்டதாரி; தொழில் நுட்பத்திலே டிப்ளோமா பட்டதாரி.

தமிழிலே, இயல், இசை நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் வித்தகர். இந்த மூன்று துறைகளிலும் சுவாமி அவர்கள் ஆற்றியுள்ள ஈடிணையற்ற, அற்புதமான சாதனைகளை விவரிப்பதற்கு இக்கட்டுரை இடமின்று.

கல்வி உலகிலே அவர் வகித்த பதவிகளும் மூன்று; ஆசிரியர் பதவி, அதிபர் பதவி, பேராசிரியர் பதவி ஆகியனவே அந்த மூன்றும்.

ஆசிரியராயிருந்து யாழ்ப்பாணம் சென்ற் பற்றிக்ஸில்; அதிபராயிருந்தது மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் ஆகியனவற்றிலாகும். பேராசிரியராயிருந்தது சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இலங்கைப் பல்கலைக் கழகத்திலும்.

இப் பதவிகளை இவர் வகித்ததன் விளைவாக ஏற்பட்ட அரும்பெரும் நன்மைகளுள் எதையும் இங்கு குறிப்பிட நாம் முற்படவில்லை.

இப்பதவிகளை, இவர் வகித்த மாகாணங்களின் தொகையும் மூன்றாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியராக வடக்கு மாகாணத்திலும், அதிபராக கிழக்கு மாகாணத்திலும், பேராசிரியராக மேற்கு மாகாணத்திலும் பணி புரிந்துள்ளார்.

மேலே சுவாமி விபுலானந்தருடைய பல துறைச் சிறப்புகளைச் சற்று தொட்டுக் காட்டினேமெனினும் மிஷனை அடிப்படையாகக் கொண்டு அவர் ஆற்றிய பணிகள் சிலவற்றை மிகச் சுருக்கமாகவாவது குறிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

மிஷனுடைய பொன் விழா நிகழும் இச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானது இதுவே.

மிஷனேடு நெருங்கிய பணிகளுள் மூன்றை இங்கு குறிப்பிடுவோம்.

இலங்கையில் இராம கிருஷ்ண மிஷன் இன்று ஆற்றி வரும் அரும்பணிகளுள் ஒன்ற் கல்லடி உப்போடையில் நடத்தப்படும் மாணவர் இல்லமாகும். (குரு குலம்). 1976இல் பொன் விழாவைக் கொண்டாடிய இம் மாணவர் இல்லம் ஆரம்பத்தில் படிப்படியாக வளர்ந்து சென்ற சில ஆண்டுகளில் சுவாமி ஜீவானனந்தாஜி அவர்களின் அயராத முயற்சியினுல் துரிதமான வளர்ச்சியை அடைந்து இன்று பெரிய விருட்சமாகிக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

இந்த அருநிலையத்துக்கு வித்திட்ட பெருமை சுவாமி விபுலானந்தருக்கே உரியது என்பதும் இது விபுலானந்தரின் சிந்தனையில் உருவானதென்பதும் பலருக்கு தெரியாமலிருக்கலாம்.

இதனை அவர் 1926ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்த பெருமக்கள் சிலருடைய ஆதரவோடு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலிருந்த வெள்ளிக்கிழமை மடத்தில் 4ண மாணவரோடு ஆரம்பித்தார்.

இதனை ஆரம்பிப்பதற்கு 2 மாதங்களுக்கு முன் பொது மக்களிடம் இதற்கு ஆதரவு வேண்டிச் சுவாமி அவர்கள் 19.4.26 இல் வெளியிட்ட பகிரங்க விஞ்ஞாபனம் வரலாற்று முக்கியத்துவமுடையது.

1929இல் இந்த மாணவர் இல்லம் 6 மாணவர்களோடு கல்லடி உப்போடைக்கு அங்கு அப்போது ஆரம்பிக்கப்பட்டிருந்த சிவானந்த வித்தியாலயத்துக்கு ஆதரவாக மாற்றப்பட்டது.

சுவாமி விவேகானந்தரது உபதேசங்களை அடியொற்றிச் சுவாமி விபுலானந்தர் ஆரம்பித்த சமூகப் பணிகளுள் முதன்மையானது இதுவாகும். இதனை மேலே நாம் குறிப்பிட்ட பணிகளுள் மூன்றினுள் முதலாதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இரண்டாவது, சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண மிஷன் மூலம் வட மாகாணத்திலும் அதிலும் சிறப்பாகக் கிழக்கு மாகாணத்திலும் புரிந்த கல்விப் பணி.

இப் பணியினை இரண்டாகப் பிரிக்கலாம்.

ஏற்கனவே நடைபெற்று வந்த இந்து வித்தியாலங்களை இராமகிருஷ்ண மிஷன் சார்பிலே பொறுப்பேற்று விருத்தி செய்தது ஒன்று. புதிதாக இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயங்களை ஆரம்பித்து விரைவாக விருத்தி செய்தது மற்றது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வைத்தியேஸ்வர வித்தியாசாலை, திருகோணமலை இந்துக் கல்லூரி ஆகியவற்றைப் பொறுப்பேற்றது முதலாவது பிரிவுக்கு உதாரணம்.

கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தை

ஆரம்பித்தது இரண்டாவது பிரிவுக்கு உதாரணம்.

*1925* இல் கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்துக்கு அத்திவாரக் கல் நாட்டியவரும் பின்னர் *1929* இல் வித்தியாலயக் கட்டிடத்தை திறந்து வைத்தவரும் சுவாமி விபுலானந்தரேயாவர்.

கிழக்கு மாகாணக் கல்வி வரலாற்றிலே *1925* ஆம் ஆண்டு மிக முக்கியமானது. இந்த ஆண்டிலும் இதற்கு அடுத்த ஆண்டுகளிலும் சுவாமி அவர்கள் தலைமையிலே கல்வி விருத்தி பற்றி ஆராயும் பொருட்டுக் கூடிய கூட்டங்களும், முடிவு செய்த தீர்மானங்களும், மேற்கொண்ட நடவடிக்கைகளும், அவற்றால் விளைந்த நிலையான நன்மைகளும் எண்ணிலடங்கா. இவை அனைத்தையும் இங்கு விவரிப்பது இலகுவன்று. இவை அனைத்துக்கும் ஜீவநாடியாகவும் நடுநாயகமாகவும் விளங்கியவர் சுவாமி விபுலானந்தர் அவர்களே.

*1939*இல் அல்மோராவில் "பிரபுத்தபாரத" (ஆங்கிலம்), சென்னையில் "வேதாந்த கேசரி" (ஆங்கிலம்), "இராமகிருஷ்ண விஜயம்" (தமிழ்) என்னும் சஞ்சிகைகளின் ஆசிரியராகச் சுவாமி விபுலானந்தர் செய்தனவற்றை மூன்றாவது பணியாகக் கொள்ளலாம்.


இப்பணி உலகளாவியதும், செயற்கரிய இப்பணியின் மூலம் சுவாமி விபுலானந்தர் இந்துமத தத்துவங்களையும் *ராமகிருஷ்ணருடைய போதனைகளையும் சுவாமி விவேகானந்தருடைய இலட்சியங்களையும் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் பரப்பிய பெருமைக்குரியவரானார்.


மேலே குறிப்பிட்ட மூன்று பணிகளை விட நான்காவதாகவும் ஒன்றைக் குறிப்பிடலாம்.

மேலே குறிப்பிட்டவை வெளிப்படையானவை; வர்ணிக்கக் கூடியவை. இனி நாம் குறிப்பிடுவது வெளிப்படையானதன்று; ஆழமானது; எளிதில் வர்ணிக்கக் கூடியதுமன்று.

சுவாமி அவர்கள் தமது தவப் பொலிவாலும், தம் நடையாலும், உடையாலும், சொல்லாலும், செயலாலும், உருவாக்கிய சூழலாலும் ஈழத்திலும், இந்தியாவிலும் தம்மைச் சார்ந்தாரிடத்திலும் ஏற்படுத்திய ஆன்மீக விருத்தியையும் பரோபகாரம் போன்ற உயர்ந்த இலட்சியங்களையுமே இங்கு குறிப்பிடுகின்றோம். இவை அளவிட முடியாதவை.

சுவாமி விபுலானந்தருடைய திருநாமம் உலகுள்ளவரை நிலைத்து நின்று வருங்காலத்தினருக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்காய் இலங்குமென்பதில் ஐயமில்லை.





RAMAKRISHNA MISSION - CANADA BRANCH
OF
RAMAKRISHNA MATH AND MISSION
BELUR MATH
CALCUTTA
INDIA

The Swami-in Charge: Rev. Pramathanandaji Maharaj
DAILY MEDIATION
at the VEDANTA CENTRE
6.00 - 7.00 A.M. and 6.00 P.M. - 7.00 P.M.

HYMNS, Readings and Meditation every
FRIDAY at 8.00 P.M.
SUNDAY at 7.00 P.M.

All are cordially invited to attend

SUNDAY SERVICES are held at 3.00 P.M. in the GOLD ROOM of the North York Community Memorial Hall (Concourse lvel of the North York Central Library, 5110 Yonge Street, North York) and LIBRARY SCIENCES BUILDING, LECTURE THEATRE 205, University of Toronto, 140 St. George Street, Toronto.

Scripture Classes
(with a short meditation)
ON SATURDAYS at 7.30 P.M.
at the VEDANTA CENTRE

RAM NAM BHAJAN on Ekadashi Days

ANNUAL RETREAT in JUNE/JULY

FUND-RAISING EVENT in September

VISITS by Swamis from India and U.S.A.

SUMMER RECESS June 30 - 8 September 1991

INTERVIEWS: Swami Pramathanandaji, Minister and Teacher will be happy to give interviews to those who want to know more about VEDANTA APPOINTMENTS should be made with him in adavance after lectures or class or by telephone.
For further information, Please call
Mrs. Saraswati Devi Ganaeshwaran at 696--5501 or The Vedanta Society at 566-5775

# நினைவினிலே........

1947ம் ஆண்டு ஜுலை மாதம் 19ந் திகதி பகல் 1 மணி கொக்குவில் இந்துக் கல்லூரியில் 8ம் வகுப்பில் (J.S.C) தமிழ் பாடம் நடந்து கொண்டிருக்கிறது. பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் தலையாய மாணவர் செ.வேலாயுதபிள்ளை தமிழ் விசேட B.A. பரீட்சை எழுதிவிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறுர்.

அவர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது ஓர் அவசர செய்தி, துக்க செய்தி அவருக்குக் கிடைக்கிறது. திகைப்படைகிறுர்.

சற்று திகைப்பாற்றிய பின் மாணவர்களுக்கு விபரம் கூறிஞர்.

தமிழ்ப்பேராசிரியர் இாரமகிருஷ்ண சங்க சுவாமி விபுலானந்த அடிகளார் மகா சமாதியடைந்து விட்டார் என்பதை மாணவர்கள் அறிந்தோம்.

அன்றுதான் சுவாமி விபுலானந்த அடிகளார் அடியேனுக்கு அறிமுகமானுர்.

அவரை உடலோடு மீண்டும் எம் ஊனக் கண்ணுல் பார்க்க முடியாதே!

ஆனுல் அவர் விட்டுச் சென்ற ஞாபகச் சின்னங்களை ஒவ்வொரு இடத்திலும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

1973இல் இராமகிருஷ்ண ஜயந்தியில் பங்குபற்றச் சென்றபோதும், பின்பும் அடிகளாரின் பிறந்த இல்லம், வாழ்ந்த சிவபுரி, அவர் ஆரம்பித்து பிள்ளையைப் போல் வளர்த்த சிவானந்த வித்தியாலயம் அவரது சமாதி, விபுலானந்த மணிமண்டபம் எல்லாவற்றையும் பார்க்கும் பாக்கியம் பெற்றேன்.

அவர் பிறந்த இல்லம் தற்போது பெண்கள் இல்லமாக மாறிவிட்டது. அவரது சமாதியில் ஈசன் உவக்கும் இன் மலர்கள் பதிக்கப்பட்டிருந்தது இன்னும என் கண்முன் காட்டிசியளிக்கிறது.

திருக்கோணுமலை சென்றபோது அவர் விட்டுச் சென்ற ஞாபகச்சின்னமாம் இந்துக் கல்லூரியில் தங்கும் பேறுகிடைத்தது.

1976ல் கொக்குவில் இராமகிருஷ்ண மிஷனுல் 1960ம் ஆண்டிற்கு முன் நடாத்தப்பட்டு பின் அரசாங்கம் எடுத்த இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி அதிபராகக் கடமை யேற்ற போது சுவாமி விபுலானந்த அடிகளார் அந்த பாடசாலை சூழலை விரும்பி அங்கு தங்கும் விபரம் அறிந்தேன். இந்தியாவிலிருந்து சுவாமிமார்கள் இலங்கை வரும்போது இப்பாடசாலையைச் சென்று பார்வையிடுவார்கள். அப்போது ஒவ்வொருவரும் ஞாபகச் சின்னமாக மரம் நாட்டுவர். அவை யாவும் அவ்விடத்தைச் சோலையாக்கி ஓர் ஆச்சிரமம் சூழலை உண்டாக்கியிருக்கிறது. எனவே சுவாமி வசதி கூடிய வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தங்காது கொக்குவிலில் இப்பாடசாலையில் தமக்கென அமைத்த அறையில் (குடில்) தங்குவார்.

அப்பாடசாலையில் அவருக்கு விழா எடுத்தோம். தியாகி இராஜகோபால் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இவற்றை எல்லாம் அனுபவித்த காரணத்தாலோ என்னவோ, இந்நாட்டிற்கு வந்த பின் சென்ற ஆண்டு விழா எடுக்க எண்ணம் எழுந்தது. அந்நேரம் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் நீண்டநாள் தலைவராக இருந்த ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தர்ஜி மகராஜ், அவரைத் தொடர்ந்து அவருக்குப் பின் தலைவராக இருந்த ஸ்ரீமத் சுவாமி சம்பிரஞ்ஞானத்தாஜி மகராஜ் மகா சமாதியடைந்ததையிட்டு பிற்போடப்பட்டு இன்று நூற்றுண்டு விழாவாகப் பரிணமிக்கிறது.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் மிக அக்கறை கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஞாபகமாக இயல், இசை, நாடகப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டு இராமகிருஷ்ண சங்க கனடாக் கிளைத் தலைவர் பரிசல்கள் வழங்குவதில் பெருமையடைகிறோம்.

கனடா வாழ் இலங்கைத் தமிழ் மக்கள் தமது நன்றிக் கடனைச் செய்வதில் பெருமை கொள்கின்றனர். குழந்தைகள் சுவாமியைப் பற்றி அறிகின்றனர்.

அவர் பணி தொடரட்டும்

**சரஸ்வதி தேவி கணேஸ்வரன்**

(தாவடி) முன்னுள் அதிபர்) ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி அதிபர்

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் - இலங்கை மாணிக்க இடைக்காடார், தெட்சணுமூர்த்தி அவர்கள் தலைமையில் கொக்குவிலில் பணி புரிந்து வருகிறது.

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"** - குறள்

## உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக!

எமக்கு நல்லாசிகள் வழங்கிய சுவாமிகள் அவர்களுக்கும் கலாச்சார அமைச்சருக்கும், ஏனைய பெரியோர்களுக்கும் கவிதை, கட்டுரைகள் எழுதிய பெரியார்களுக்கும், விழாவிற்கு மண்டபம் தந்துதவிய North York Board of Education, Bathurst Heights Sec. School நிர்வாகிகளுக்கும் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த சுவாமிஜிகளுக்கும் மற்றும் சிறப்புரை வழங்கியவர்களுக்கும், சுவாமி விபுலானந்த பிள்ளைத் தமிழ் புத்தகம் அன்பளிப்புச் செய்த பெரியார் ஈழத்துப் பூராடனார் செல்வராசகோபால் அவர்கள். கலை நிகழ்ச்சிகளைத் தந்துதவிய கலைஞர்கள், சிறுவர் சிறுமியர், பெற்றோர். போட்டி நடாத்த மண்டபம் தந்துதவிய தமிழ் கூட்டுறவு ஸ்தாபனம். போட்டிகளைத் திறம்பட நடாத்தித் தந்த மத்தியஸ்தர்கள். மலருக்கு முழு உதவியும் செய்த Dr. அருணா கணேஷாள். அட்டைப் படத்தை வரைந்து உதவிய திருமதி. யோகா இரத்தினராசா.

தங்கப் பதக்கம், பரிசுகளுக்கு நிதி உதவியோர், மலருக்கு விளம்பரம் தந்தோர், சிற்றுண்டி தயாரித்த அன்பர்கள், தேநீர் விருந்தளித்த சீகான் (Ceycan) ஸ்தாபனத்தார், மலர் சிறப்பாக அமைய உதவி அச்சிட்ட றிப்ளக்ஸ் அச்சகத்தார், எங்கள் அழைப்பை ஏற்று விழாவிற்கு வருகை தந்து எம்மை மகிழ்வித்த அனைவருக்கும், பொதுவாக உதவி செய்த, உற்சாக மூட்டிய கனடா தமிழ் அன்பர்கள் அனைவருக்கும்,

**எல்லோருக்கும் இறையருள் வேண்டி நிற்கும்
தமிழ் முருகன் கோவில் சபை.**

| | |
|---|---|
| **வேலுப்பிள்ளை கணேஸ்வரன்** | **க.ஆறுமுகதாஸ்** |
| தலைவர் | செயலாளர் |

தரமான அச்சு வேலைகளுக்கு

# றிப்ளக்ஸ் அச்சகம்

## REFLEX PRINTING


1108 Bay St., Toronto, Ontario M5S 2W9

Tel:**(416) 975-0196** Fax: **(416) 975-0759**

*"வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல*
*உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"* *சுவாமி விபுலானந்தர்.*

# பேன்சி பூக்கடை






உங்களுடைய திருமண
விழாக்களுக்குத் தேவையான
பூமாலை,
நகை,
தலைநகை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாணப் பூசைக்குரிய
பொருட்கள்
முதலியவற்றிற்கு

**பேன்சி பூக்கடையை** அணுகுங்கள்





**பூமாலை கட்டத் தேவையான
மலர்கள், கயிறு
முதலியன மொத்த
விலையில் கிடைக்கும்**

கோவில் பூசைக்குத்
தேவையான பூமாலை, கற்பூரம்,
சந்தனம், குங்குமம், விபூதி,
ஊதுபத்தி முதலியனவும்
கிடைக்கும்

தொலைபேசி இலக்கம்

**(416) 770-5382**

ஸ்ரீ கணேசா கோவிலுக்கு அருகில் இருக்கின்றது

# கொழும்பு பூ(f)ட்

உங்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களை ஏற்றி இறக்கவும் -
கொண்டு வந்து விடவும் **கொழும்பு பூ(f)ட்**
ஸ்தாபனத்தின் வான் (MOVING) ஐ நாடவும்

இலங்கை, இந்திய தானிய வகைகளுக்கும் உடன் இறைச்சி
மற்றும் கடலுணவு, மரக்கறி வகைகளையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ளநாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**கொழும்பு பூ(f)ட்**

## வீடியோ பிரிவு

எம்மிடம் தமிழ் - இந்தி - புதிய பழைய வீடியோ பிரதிகள்
வாடகைக்கும்
புதிய-பழைய திரைப்படப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள்
C.D. லேசர் இசைத்தட்டுக்கள் விற்பனைக்கு உண்டு

$40க்கு மேல் கொள்வனவு செய்தால் இலவச விநியோகம் உண்டு

**COLOMBO FOOD**
2823 EGLINTON AVE. EAST, SCARBOROUGH
TEL/FAX: **265-1265**

கோலாகல திறப்பு விழா

# குமரன்ஸ்
# KUMARANS

1278 BLOOR ST. W.
TORONTO, ONT. M9M 2S7
(LANDSDOWNE SUBWAY இற்கு அருகாமையில்)

உங்கள் தேவைகளிற்கு
எங்களை தொடர்பு கொள்ள

T.P: **(416) 533-3203 / 533-1064**
TEL/FAX: **533-1110**

# LANKA FISH MARKET

சிங்க இறால், கணவாய், நண்டு
பலவகை உடன் மீன்கள்
மற்றும் கடலுணவுப் பொருட்களை
நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

**லங்கா பிஷ் மார்க்கட்**

(AT KENNEDY/ELLESMERE)
(OPPOSITE TO HIGHLAND FARM)
888 ELLESMERE ROAD, UNIT 7
SCARBOROUGH, ONT. M1P 2W6


**(416) 299-0894**

மிகப் பெரிய தேயிலை
இறக்குமதியாளர்களான

# Ceycan Trades

ஸ்தாபனத்தாரால் இறக்குமதி
செய்யப்பட்ட தரமான குணமான
STASSEN LIQUID
GOLD TEA
சுவைத்துப் பாருங்கள்
மேலதிக தொடர்புகளுக்கு
Tel: 416-609-2001
Fax: 416-764-3295
29 Passmore Ave. #4,
Scarborough, M1V 3H5

# சிங்கப்பூர் ரவல்ஸ் லிமிட்டெட்




கொழும்பு, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிற்கு மிகக் குறைந்த கட்டணத்தில் விமானச்சீட்டுகளைப் பெறக்கூடிய ஒரே ஸ்தாபனம்

## SINGAPORE TRAVLES LIMITED.

TEL: **(416) 285-9322**
FAX: **(416) 285-9794**
1245 ELLESMERE RD. SCARBOROUGH

இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை இந்திய உணவு வகைகள்
தமிழக மாத, வார சஞ்சிகைகள்
இலங்கையின் தமிழ், ஆங்கில பத்திரிகைகள்
பழைய புதிய பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள், C.Dகள்
பழைய புதிய தமிழ் வீடியோ படங்கள்
மரக்கறி வகைகள், பால், பழவகைகள்

அனைத்தையும் ஒருங்கு சேர பெற

# ஜெயா அன் பிரதர்ஸ்

588 பார்லிமென்ட் வீதி, (வெலஸ்லி சந்தி) ரொறன்ரோ
தொலைபேசி **(416) 920-9226, / 960-9632 / 920-0998**
**Fax: 920-1089**

ஜெயா அன் பிரதர்ஸ் வழங்கும் தமிழ்த் திரைப்படங்களை ஜெராட் வீதி கிழக்கிலுள்ள
குளிரூட்டப்பட்ட **ராஜா தியேட்டரில்** (இந்தியா தியேட்டர்)
வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் பார்த்து மகிழலாம். விபரங்களுக்கு **462-0651 / 920-9226**

தமிழ் மக்களிற்கோர் நற்செய்தி

குடும்ப வைத்தியர் (FAMILY PHYSICIAN)

**டாக்டர் சிவகாமி ஜீவானந்தம் அவர்கள்**

தங்களுடைய சேவையை புதியதோர் மருத்துவமனையில் மிகவும் மகிழ்ச்சியுடன் வழங்கிவருகிறார் மக்களிற்கு சேவை செய்வதே தங்களின் மனநிறைவாக கருதுகிறார். Dr.சிவகாமி ஜீவானந்தம் அவர்களிடம் முன் அறிவிப்பு இல்லாமல் (Appointment) உங்களது சேவையை ஏழு நாட்களும் பெற்று கொள்ள முடியும்.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10:00 - மாலை 8:00

சனி ஞாயிறு மற்றும் HOLIDAY நாட்கள் காலை 10:00 - மாலை 2:00

## ROWNTREE GATE MEDICAL CLINIC

2687 KIPLING AVE. UNIT #11 (2K.m. South of Steels)

Tel: **(416) 746-7355**

---

## AUDIO 'N' BUSINESS SYSTEMS LTD.

**Dave Bhasin**

**President**

• typewriters • calculators • dictating & transcribing
• telephone answering • computer accessories • fax machines

307 Lesmill Road,
Don Mills, Ontario M3B 2V1

Tel: (416) 449-4141
Fax: (416) 449-1351

**Tel.: 754-1244 (Bus.)**
**467-0041 (Res.)**

Tapscott
Family Restaurant
L.L.B.O.

**5633 Finch Ave. E., Unit #3**
**Scarborough, Ontario**

மணவிழாக்கள் -
பிறந்தநாள் கொண்டாட்டங்கள்
மற்றும் வியாபார
குடும்ப சம்பந்தமான
விழாக்கள் யாவற்றிற்கும்
சுவையான நற்சுவை
உணவு வகைககள் செய்து
கொடுக்கப்படும்.

சனி, ஞாயிறு அன்று
விசேடமான ஸ்ரீலங்கா
உணவுகள் பரிமாறப்படும்.



உ

# சிவஸ்ரீ நிலையம்



சத்யோஜாத சிவாச்சாரியார், "திருமுருககுருமணி"
(இந்துமத பீடாதிபதி, இலங்கை) (நல்லை ஆதீனம், யாழ்)

## சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள் (கணேஷ்சுவாமி)

(இந்துமதகுரு, சோதிடர், திருமண பதிவதிகாரி -கனடா)

தொலைபேசி எண்: **(416) 291-5042**

இந்து மத கிரியைகள் அனைத்தும் நடாத்தி வைப்பதுடன் இந்துத் திருமணத்துக்கு தேவையான மணவறை மண்டபம், மாலைகள் முதலான எல்லா ஒழுங்குகளும் எம்மால் நிறைவு செய்யப்படும் திருமணப் பொருத்தம் பார்க்கவும் விவாஹப் பதிவு செய்து கொள்வதற்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்க

தரமான நகைகளைக் குறைந்த விலையில்
செய்து கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

# சக்தி ஜூவலறி

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
இவைகளே எமது மூலதனம்
தாயகத்தின் தங்க வைர நகைகளை
தரமிக்க கைவண்ணத்தில் கனடாவில்
உங்கள் கண்முன் நிறுத்தும் ஸ்தாபனம்

# சக்தி ஜூவலறி

Finest Quality 22K Gold & Diamond
Jewellery Expert Custom Jewellery & Repairs

## SAKTHI JEWELLERY

880 DUNDAS ST. E. #B55,
MISSISSAUGA, ONT. L4X 4G6
**(416) 949-1868**
(ஆனந்தா ஸ்ரோர்ஸ் இன் உள்ளே)

# Brambos Signs & Advertisers

Lowest Prices -
Quick & Quality Work

**(416) 291-5428**

86 Melford Dr., Unit 8
Scarborough, Ont. M1B 2X7

# கப்றிக்கோன் சோதிட நிலையம்

தமிழீழத்தில் சோதிடக் களஞ்சியம் என்ற பெயரில் எமது தந்தையார் திரு. செல்லப்பா மார்க்கண்டு அவர்களாலும் அவர்தம் மறைவுக்குப் பின்னர் எம்மாலும் நடத்தப்பெற்று வந்த இந்த நிறுவனம் கனடா வாழ் மக்களுக்குச் சேவை செய்ய கப்றிக்கோன் சோதிட நிலையம் என்ற பெயரில் தமது சேவைகளை நல்கி வருகின்றது.

எமது சேவைகள்:
ஜாதகம் கணித்தல், திருமணப் பொருத்தம் நிச்சயித்தல்,
எதிர்காலப் பலாபலன்கள் பார்த்தல்,
சுபமுகூர்த்தம் அமைத்தல்,
நட்சத்திர கிரக எண்சோதிட முறையில் பெயர் அமைத்தல்

மேலதிகத் தொடர்புகளுக்கு
எழுவையூர் மார்க்கண்டு - பரமலிங்கம்
சோதிடர்
1455 Williams Port Dr., #308
Mississauga, Ont. L4X 2T5
TEL: 416-602-1445

உடன் மீன்,
நண்டு, கணவாய், இறால்,
உடன் கோழி, ஆடு இறைச்சி
பழவகைகள்
மரக்கறி வகைகளுக்கும்
ஓடியோ வீடியோக்களுக்கும்
உங்கள் இடமாற்றத் (Moving)
தேவைகளுக்கும்
நாட வேண்டிய இடம்

## S. S. SUPERMARKET

1472 Queen St. West
(Queen & Landsdowne)
Toronto, Ontario M6K 1M4
**(416) 536-9281**

- சுடு சுடு அப்பம், தோசை எங்களது காலை SPECIAL
- வட அமெரிக்காவில் மிகப்பெரிய இலங்கை உணவு விற்பனை நிலையம்
- சகலவிதமான உணவுவகைகளிற்கும்
- உங்களது திருமண வைபவங்களிற்கு தேவையான மணவறை தலைப்பாகை, குத்துவிளக்கு போன்றவற்றை எங்களிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.
- விமானச் சீட்டுகளிற்கு சுந்தரியைத் தொடர்பு கொள்ளுங்கள்

# சிவாஸ் ரேடிங் கம்பனி



# SIVA'S TRADING CO. LTD.

3852 FINCH AVE. E. KENNEDY/FINCH, SCARBOROUGH

TEL: **321-2739**

ஹலோ! ஹலோ உங்களைத்தான்! என்ன ஷொப்பிங் போக ஆயத்தமே!
என்ன நாலைஞ்சு இடம் போய் சாமான் வாங்க வேணுமோ? சீச்சீ அப்படியெல்லாம்
அலையத் தேவையில்லை. நான் சொல்லுற இடத்துக்கு போனால் உங்களுக்குத் தேவையான
எல்லாச் சாமானையும் ஒரேயடியாய் ஒரு கூரைக்கு கீழே வாங்கலாம் அந்த இடம்

# GREENLANDS

DEPARTMENTAL STORES

#7 & 8 - 5633 FINCH AVE. E. AT TAPSCOTT

## குரோஸரீஸ்

மாளிகைச் சாமான் அல்லது குரோஸரீஸே உங்கடை முதல் தேவை?
கிறீன்லாண்ட்ஸ் இலங்கை இந்திய கனடிய உணவுப் பொருட்கள் எல்லாம் இருக்கு.
அதோட பச்சைப் பசேலென்று மரக்கறிகள் பழவகைகள் மற்றெல்லாப் பொருட்களைக்கூட நியாயமான விலைக்கு கிறீன்லாண்ட்ஸில் வாங்கலாம்.

## பொழுதுபோக்கு

உணவு, உடைக்குப் பிறகு என்ன பொழுது போக்குத்தானே GREENLANDS ஐல Video செக்ஷனிலை பார்த்து ரசிக்க அருமையான பழைய புதிய வீடியோக்களை வாடகைக்கு எடுக்கலாம்.

கேட்டு மகிழ Audio நாடாக்கள் C.D. லேசர் இசைத் தட்டுக்களை நியாயமான விலைக்கு வாங்கலாம்.

வாசிக்க ஏதும் இல்லை எண்டு கேக்கறிங்களோ கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கோ. கெதியிலை ஒரு பெரிய நூலகம் ஒன் GREENLANDS இயங்கப் போகுது. 2000க்கு மேற்பட்ட நாவல்கள் அப்ப கிடைக்கும்.



## புடவைப் பிரிவு

சரி உணவு விஷயம் முடிஞ்சுது இனி என்ன உடுப்போ?
உங்களுக்குத் தேவையானது GREENLANDS ல் கிடைக்கும். சிங்கப்பூர், இந்தியா, தாய்லாந்து, இலங்கை, எண்டு எல்லா இடத்தில் இருந்தும் நவநாகரீக பாணியில் ஆடைகள், வண்ணச் சீலைகள், கல்யாணப் பட்டுப்புடவைகள், வேட்டிகள் கொண்டு வந்து விற்பனை செய்யினம். அதோடை நல்ல எவர்சில்வர், பித்தளையில் பாத்திரங்கள் அலங்காரப் பொருட்களும் கிடைக்கும்.

## மாமிசப் பிரிவு

அசைவ உணவு கிடைக்குமென்று கேக்கீறீங்கள்?
ஓம்! ஓம்! மச்சம் மாமிசம் எல்லாம் GREENLANDS ல் கிடைக்கும்.

நல்ல Fresh இறைச்சி வகைகள் (Mutton, Chicken Beef, Pork) உண்டு.
அதோடை Fresh மீன் வகைகள் கணவாய், நண்டு இறால் எல்லாம் இருக்கு.
விலையோ சரியான மலிவு.

சரி இவ்வளவும் சொல்லி போட்டன் ஒருக்காப் போய்ப் பாருங்கோவன்.
அதுக்குப் பிறகு நெடுக அங்கேதான் போவீங்கள். இப்பொழுது ஏழு நாட்களும் காலை 9.00
மணி தொடக்கம் இரவு 10:00 மணி வரை திறக்கப்பட்டுள்ளது.

# Greenlands

Tel: **609-3333** Fax: 609-3911

"ஜீவ சேவையே சிவசேவை" - சுவாமி விவேகானந்தர்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

SRI SIVA JEWELLERY
721 BLOOR ST. W., SUITE 2C, TORONTO, ONTARIO

(416) 531-4867

REFLEX PRINTING, 1108 BAY ST., TORONTO • 975-0196